# மலர்ந்த ஜீவியம்

## ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

ஏப்ரல் 2009 ஜீவியம் 14 மலர் 12

*இம்மாத மலரில். . . .*

பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| அன்பர் கடிதம் | 2 |
| இம்மாதச் செய்தி | 5 |
| அன்பு அமிர்தமாகி அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு | 6 |
| இறைமுயற்சி தொடங்குமிடம் | 11 |
| முரண்பாடுகள் உடன்பாடுகளாகும் | 14 |
| லைப் டிவைன் | 18 |
| தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும் | 28 |
| குறையை உணரும் தாழ்ந்த மனம் | 29 |
| சாவித்ரி | 33 |
| அன்னையே வரமொன்று கேட்கிறேன் | 35 |
| யோக வாழ்க்கை விளக்கம் V | 43 |
| ஆன்மீக மற்றும் மனோதத்துவ உண்மைகள் | 51 |
| லைப் டிவைன் - கருத்து | 55 |
| நல்லெண்ணம் | 57 |
| அஜெண்டா | 63 |

❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

### ஜீவியத்தின் ஓசை

**நாம் படித்துத் தெரிந்துகொண்ட பெரிய ஆன்மீக உண்மைகளை நம்முடைய அன்றாட வாழ்க்கையில் நிகழும் சிறுகாரியங்களிலும் கண்டறிய வேண்டும்.**

**அப்படிப் பார்க்கவில்லை என்றால், தெரிந்துகொண்ட உண்மையை முழுமையாக ஏற்கவில்லை என்றர்த்தமாகும்.**

**இறைவனின் படைப்பில் விரயமில்லைஎன்று புரிந்துகொள்வது விவேகமாகும்.**

**பார்த்தவுடன் ஆன்மா புரிந்துகொள்ளும் ஒரு விஷயத்தை அறிவு ஆராய்ச்சி செய்துதான் ஏற்கும்.**

**உணர்வு மையம் தோல்வி அடைந்துதான் புரிந்துகொள்ளும்.**

**அழிவே வந்தாலும் உடம்பு புரிந்து கொள்ளாது.**

## அன்பர் கடிதம்

*ஓம் நமோ பகவதே!*

*ஸ்ரீ அன்னைக்கும், பகவான் ஸ்ரீ அரவிந்தருக்கும், குருநாதர் ஸ்ரீ கர்மயோகி அவர்களுக்கும் என் பணிவான வணக்கங்கள்.*

ஸ்ரீ அன்னை அவர்கள் என் வாழ்வில் எத்தனையோ பல நல்ல அனுபவத்தைத் தந்துள்ளார்கள். அதில் நான் மிகவும் முக்கியமாகக் கருதிய குழந்தைச் செல்வத்தைத் தந்தமைக்காக அன்னைக்கும், பகவானுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, அவ்வனுபவத்தை நன்றியுரையாக இக்கடிதத்தில் எழுதுகின்றேன்.

எனக்குக் கடந்த ஆண்டு அக்டோபர் 29ஆம் தேதி 2007இல் திருமணம் அன்னையின் அருளால் நல்லபடியாக முடிந்தது. திருமணம் முடிந்ததும் அனைவரிடமும் அடுத்ததாக எதிர்பார்க்கப்பட்டது குழந்தைச் செல்வம். எனவேதான் அதை அன்னையிடம் பிரார்த்தனை செய்தேன். இப்படியாக ஒரு மாதம் சென்றது. பின் எனக்கு, தியான மையப் பொறுப்பாளர் அவர்களின் துணைவியார் கூறியது போல் பிரார்த்தனை செய்வோம்என்று அன்னையை மட்டும் நினைவுகூர்ந்து, அன்னையின் கண்களிலிருந்து ஒரு ஒளி தோன்றி, அவ்வொளி என் வயிற்றில் படுமாறும், அவ்வொளியே குழந்தையாகவும் உருவெடுப்பதாகவும் எண்ணிப் பிரார்த்தனை செய்தேன். முதல் இரண்டு நாட்கள் இவ்வாறு அன்னையின் கண்களிலிருந்து ஒளி தோன்றுகின்றது என்பதை என்னால் சரியாக உணர முடியவில்லை. காரணம், அன்னை மீது நம்பிக்கையிருந்தாலும், மனதில் பலவிதமான எண்ணங்கள் ஓடிக்கொண்டே இருந்ததால். பின், மூன்றாம் நாள் அவ்வொளியை என்னால் பார்க்கவும், அவ்வொளி என் வயிற்றின் மேல் படுகின்றது என்ற ஒருவிதமான அனுபவத்தையும் உணர முடிந்தது. இவ்வாறாக ஒரு மாதம் பிரார்த்தனை செய்தேன். இப்படி ஒரு மாதம் சென்ற பொழுதுதான் எனக்கு ஏன் இன்னும் மதர் நான் கேட்டதைத் தரவில்லை என்ற எண்ணம் தோன்றியது. இவ்வெண்ணத்துடனேயே அன்று மாலை தியானத்தில் அமர்ந்து மதரை பிரார்த்தனை செய்தேன். அப்பொழுதுதான் எனக்குத்



தோன்றியது, நான் கேட்டதை மதர் அன்றே தந்துவிட்டார்கள்என்றும், நான்தான் அதை உணராமல் உள்ளேன் என்றும் எனக்குப் புரிந்தது. உடனே மதரிடம் நன்றியையும், மன்னிப்பையும் கேட்டேன். ஏன் என்றால், மதர் தந்ததை உணராமல் இருந்ததற்காக மன்னிப்பையும், என் பிரார்த்தனையை ஏற்று இவ்வயிற்றில் ஒரு நல்ல ஜீவனை உருவாக்கி தந்தமைக்காக நன்றி என்றும் கூறினேன். பின் டாக்டரிடம் கன்பர்ம் செய்தபிறகு அனைவரிடமும் கூறினேன். அன்று முதல் அக்குழந்தை வயிற்றில் இருக்கும் அந்த 10 மாதங்களும் எனக்கு மற்ற பெண்களைப் போல் தலைசுற்றல், வாந்தி, சோர்வு என்ற எந்த உபாதைகளும் இல்லாமல், தினமும் 3 மணி நேரம் டிராவல் செய்து அலுவலகம் சென்று, வேலையும் பார்த்து, ஒவ்வொரு நாளும் நல்லபடியாகச் சென்றது. கடைசியில் மருத்துவர்கள் கொடுத்த நாட்களுக்கு 10 நாள் முன்னதாக ஓர் அழகிய பெண் குழந்தை பிறந்தது. ஆனால் அப்பிரசவ நேரத்தில் எனக்கு B.P. அதிகமானதால் நார்மல் டெலிவரி ஆகாமல் போய்விட்டது. பின் குழந்தை பிறந்தும், ஒரு வாரம் குழந்தை ஓர் இடம், நான் ஓரிடமாக அல்லல்பட்டேன். அப்பொழுதும் நான் அன்னையிடம், “நான் என்ன தவறு செய்தேன். இக்குழந்தையைத் தந்தது நீங்கள், நீங்கள் மட்டுமே. அனைவரும் என்னை, ‘உனக்குப் பொறுமையில்லை. அதனால் உன் குழந்தைதான் கஷ்டப்படப் போகிறது. உனக்கு அன்னை மேல் நம்பிக்கையில்லை. எல்லாம் நீ என்று எண்ணுகிறாய்’ என்றெல்லாம் கூறுகின்றார்கள். ஆனால் அன்னையே இக்குழந்தை என் வயிற்றில் உருவான நாள் முதல் அதைப் பெற்றெடுத்த நாள் வரை உங்களை மட்டும்தான் நம்பியுள்ளேன்என்பது உங்களுக்குத் தெரியும். எனவே இக்குழந்தையின் உடல்நலத்தை உங்களுக்குச் சமர்ப்பணம் செய்கின்றேன்” என்று கூறி, அன்று இரவு படுக்கச் சென்றேன். பின், மறுநாள் அன்னை எனக்கு ஒரு நல்ல செய்தியைத் தந்தார்கள். குழந்தைக்கு எந்த ஓர் ஆபத்தும் இல்லைஎன்றும், அன்று மாலை 6 மணியளவில் குழந்தை டிஸ்சார்ஜ் செய்யப்படும்என்றும் கூறினார்கள். எங்கள் குடும்பத்தில் அன்னையை அறிந்த நாள் முதல் சரியாக மாலை 6 மணிக்கு அனைவரும் ஒன்று கூடிப் பிரார்த்தனை செய்வோம். அப்பிரார்த்தனையின் அருளே அன்று மாலை 6 மணிக்கு என் குழந்தையை மதர் என்னிடம் கொண்டுவந்து

சேர்த்தார்கள். அன்னையின் அருளால் இப்பொழுது என் குழந்தை நன்றாக உள்ளது. அக்குழந்தைக்கு 9.10.2008 அன்று Mirra Suraksha என்று மதர் சென்டரில் பெயரையும் சூட்டியுள்ளோம். இப்படி ஒரு நல்ல அனுபவத்தைத் தந்தமைக்காக மதர் அவர்களுக்கும் பகவான் ஸ்ரீ அரவிந்தர் அவர்களுக்கும் நன்றிகள் பல.

*- ஹேமலதா தியாகு, சென்னை.*

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

மனிதன் தன் பண்பைப் பொதுவான அளவுக்கு உயர்த்தினால், மனிதன் கரைந்துவிடுவான். தனி மனிதனுடைய ஆசைகளுக்கு இறைவனுடைய நோக்கில் என்ன அர்த்தம்என்று புரிந்து கொள்வது உலகத்தை ''அற்புதம்'' என்று அறிவதாகும்.

***நம் ஆசைக்கு இறைவனின் உத்தரவு "அற்புதம்".***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

சமூகத்தின் அடியில் இருப்பவன் ஒரு காரியத்தைச் செய்ய படிப்படியாக நகரவேண்டும். மேல் மட்டத்திலுள்ளவர்கள் நேரடியாகச் செயல்படுகிறார்கள். காரியம் உடனே நடக்கிறது. வாழ்வின் அமைப்பை நமக்குட்படும்படிச் செய்ய வல்லது சமர்ப்பணம். ஆர்வம் அதிதீவிரமானால், சத்தியஜீவிய அமைப்பு நமக்கு எட்டும்.

***தீவிர ஆர்வத்திற்கு சத்தியஜீவிய சக்தி கிட்டும்.***



## இம்மாதச் செய்தி

**எந்தத் தீமையையும்**

**நன்மையாக மாற்றிப்**

**பிரச்சினையைத் தீர்ப்பது**

**சத்தியஜீவியம்.**

# அன்பு அமிர்தமாகி,
# அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு

கர்மயோகி

**முகவுரை**

வேதம் முதல் இன்று வரை எழுந்த ஆன்மீக இயக்கங்களால் உலகில் ஏற்பட்ட மாறுதல்கள் ஏராளம். ஆனால், தீமையைப் பொருத்தவரை எந்தப் பெரிய மாறுதலுமில்லைஎன பகவான் அவர்தம் வாழ்நாளில் குறிப்பிட்டார். அந்த இலட்சியத்தைச் சாதிக்க அவர் உடலை விட்டுப்போய் 1956இல் சத்தியஜீவியம் உலகை வந்தடைந்தது.

**அத்துடன் நரகம் அழிந்தது.**

பகவான் பணியைத் தொடர்ந்துசெய்த அன்னை இந்த யோகத்தை எவரும் செய்ய இயலாதுஎனக் கண்டு, தாமும் உடலை நீத்தார்.

**சொர்க்கத்தை உலகுக்கு அப்பொழுது அளித்தார்.**

1989இல் ரஷ்யா கம்யூனிஸத்தையும், எதேச்சாதிகாரத்தையும் கைவிட்டபொழுது அடுத்த 15 ஆண்டுகளில் உலகம் எப்படி மாறும் என அவர்களோ, மற்றவரோ நினைக்கவில்லை. குறைகளைக் கருதாமல், புதிய நிறைவுகளைக் கணக்கில் எடுத்தால், அவை கணக்கிலடங்கா. இந்தியா வீறுகொண்டு எழுவதைக் காண்கிறோம். பெங்களூரில் ஓர் ஏக்கர் நிலம் 100 கோடி விலை போகிறதுஎன்பது செய்தி. இது பணம். அதை மட்டுமே கணக்கிட முடியும். மற்ற எல்லாத் துறைகளிலும் நரகம் அழிந்து, சொர்க்கம் எழுவதை உலகம் காண்கிறது. அன்பர்கள் சிறப்பான ஆன்மீக வாய்ப்பையுடையவர்கள். அவர்களில் ஒருவர் அனைத்தையும் அபரிமிதமாகப் பெறும் நேரம் வந்ததையறியாமல் எதிரான நிலைமைகளை அனுபவித்தபொழுது,

> மனம் அன்னையை நோக்கி பக்தி, நம்பிக்கையுடன் சென்றால் அவருக்குள்ள வாய்ப்பு அபரிமிதமாகப் பலிக்கும்என்பதை விளக்க அவர் வாழ்வில் நேரடியாகக் கண்ட நிகழ்ச்சிகள் மூலம் அவருக்காக எழுதப்பட்ட 141 கட்டுரைகளை வெளியிடுகிறேன். இதற்குத் தலைப்பாக,



**"அன்பு அமிர்தமாகி, அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு"**

என்றேன்.

நியூயார்க்கில் Investment Bankers கம்பனியில் வேலை செய்பவர்கள் சராசரியாக 1 மணிக்கு $ 33,000, i.e. ரூ.13 இலட்சம் சம்பாதிக்கிறார்கள். இங்கு திருமண வெப்சைட் நடத்துபவர் 1 கோடி பேர் தம் சைட்டுக்கு வந்துள்ளனர் என்கிறார். ரூ.1,500 கோடி கடந்த 10 ஆண்டுகளில் அவர் பெற்றிருக்கக்கூடும்என்பது யூகம்.

'வறுமை ஒழிந்துவிட்டது' எனக் கூறத் தோன்றுகிறது. பதிலாக, திரண்ட செல்வம் அனைவரையும் நாடுகிறதுஎனலாம். 1989இல் நான் அன்பர்கள் எளிதாக 1 கோடி ரூபாய் சம்பாதிக்கலாம்என நினைத்தேன். 100 கோடி ரூபாய் சம்பாதிப்பது முடியும், எவராலும் முடியும்என நான் நம்புகிறேன். அந்த எண்ணத்தை இந்த அன்பருக்கு மனதில் பட எழுதிய கட்டுரைகள் இவை.

உழைப்பு பணம்.

கடின உழைப்பு பெரும்பணம்.

திறமையான உழைப்பு பெருகும் பணம்.

முறையான, திறமையான உழைப்பு சூட்சுமமான பணம்.

இனிமையாக அது இருந்தால் பெருகும் பணம் நாமறிந்த உலகளவு பெருகும்.

அறிவுள்ள உழைப்பு அபரிமிதமான பணம்.

ஆத்மாவின் உழைப்பு தவம், யோகம்.

ஆத்மாவின் திறன் பண்புகள். பண்புள்ள உழைப்பு ஆன்மீக உழைப்பு.

ஆன்மீக உழைப்பு அமிர்தமான, அபரிமிதமான, தொடர்ந்து வளரும் பணம் சூட்சுமமாகப் பெருகுவதாகும்.

ஆன்மீக உழைப்பு மனதால் வெளிப்பட நல்லெண்ணம் தேவை.

அது வாழ்வில் பலிக்க உறவு இனித்து, ஆன்மீகச் சுவைபெற வேண்டும்.

அது பலத்த அடிப்படைபெற மன, மெய், மொழிகளால் நல்லது மட்டும் வெளிப்பட வேண்டும்.

அறிவும், அன்பும் உள்ளவர் பண்புடையவரானால், நல்லெண்ணம் வெளிப்பட நடக்கும் நல்லுறவில் அயராது உழைக்க, உழைப்பு இனிக்குமானால், அவர் அன்னை அன்பரானால், அவரை நாடி திரண்ட செல்வம் தானே வரும்.

## 141 கட்டுரைகளைப் பற்றிய குறிப்பு

✡ "நான் ஆர்வத்துடன் மனிதனுக்காகத் தயாரித்த உணவை அவன் மறுத்துவிட்டதால் தெய்வங்கட்குப் பரிமாறுகிறேன்" என்று அன்னை கூறினார்.

✡ இந்த 141 கட்டுரைகள் 2 ஆண்டிற்கு முன் அருளின் மையத்தில் வாழும் அன்பருக்காக எழுதப்பட்டது. அவருக்குப் பயன்பட்டதாஎன எனக்குச் செய்தி வரவில்லை. யோகத் தகுதியுள்ள அன்பர்கட்குப் பயன்படும் வாய்ப்புண்டுஎன்பதால் வெளியிடுகிறேன்.

❀ நான் "கூறும்" நோக்கம் "100 ரூபாய்" பெறுவது.

நோக்கம் அது இல்லை. நோக்கம் அன்னை.

"100 ரூபாய்" அன்னையை அடையும் வாயில்.

தமிழ்நாடு தவப்பயன் பெற்றது.

இந்தியா புண்ணிய பூமி.

புதுவை பூலோகச் சுவர்க்கம்.

நாம் அனைவரும் அன்னையை அறிவோம்.

*அவர் பரிணாம இலட்சியத்தை அறியோம்.*

*அப்பரிணாம இலட்சியம் பிரபஞ்ச இலட்சியம்.*

*நாமறியும் சமர்ப்பணம் பிரச்சினையைத் தீர்க்கும்.*

சமர்ப்பணம் வாய்ப்பையும் உற்பத்தி செய்யும்.



அவை வாழ்க்கைக்குரிய சமர்ப்பணம்.

யோகத்திற்குரிய சமர்ப்பணம் மௌனத்தை நாடும்.

மௌனத்தைக் கடந்த மௌனத்தையும் அறியும்.

ஆத்ம சமர்ப்பணம் அதையும் கடந்தது.

அதிலும் நம்மைக் கடந்த பிரபஞ்ச நிலையுண்டு.

அதையும் கடந்த பிரம்ம நிலையும் உண்டு.

பிரம்மம் உலகில் அற்புதமாக எழுவது யோக இலட்சியம்.

அதுவே இறைவன் நாடுவது.

இறைவன் நாடும் இன்பம் இகவாழ்வில் அன்பருக்கும் உண்டு.

அன்பன் பாக்கியம் செய்தவன்.

பாக்கியம் யோக சித்தியாகும் மார்க்கத்தில் முதற் கதவு "100 ரூபாய்".

-- *ஆசிரியர்.*

✡ சிரபுஞ்சி இந்தியாவில் அதிக மழைபெறும் இடம். 425" மழை பெய்கிறது.

இங்கு, கோடையில் தண்ணீர்ப் பஞ்சம்.

கேட்கவே வினோதமாக இருக்கிறது.

✡ அமெரிக்க சராசரி மழை 26.1".

அமெரிக்க மக்கள் தொகையில் 2% மக்களே விவசாயம் செய்கின்றனர்.

32 கோடி மக்கட்குரிய உணவு தான்யம் உள்நாட்டிலேயே உற்பத்தியாகிறது.

உலகில் எந்த நாட்டு உணவுப் பற்றாக்குறையையும் சரிசெய்வது அமெரிக்கா.

பெரும்பாலும் வானம் பார்த்த பயிரே வழக்கம்.

அப்படியும் ஏராளமாக உபரி மார்க்கட்டிற்குவந்து விலைசரிவதால் சர்க்கார் விவசாயிகளை, எல்லா நிலத்தையும் பயிரிட வேண்டாம்எனக் கேட்டுக் கொள்கிறார்கள்.

*ஓர் ஏக்கர் பயிரிடாமல் கரம்பாகப் போட்டால் $1000 மான்யம் தருகிறார்கள்.*

✡ இந்தியாவில் சராசரி மழை 80”.

✡ 1965 வரை இந்தியா உணவுப் பற்றாக்குறை நாடாக இருந்தது.

✡ வசதியில்லாமல் மனிதன் கஷ்டப்படுகிறான்.

வசதியிருந்தும் கஷ்டப்படுபவர் உண்டு. அதிகமில்லையென்றாலும், உண்டு.

26’’ மழையில் உபரி காணும் பொழுதும் 80’’ மழையில் பற்றாக்குறையாக இருப்பது மனித நிலை. நம் நாட்டில் 60% விவசாயம் செய்கின்றனர்.

✡ 1870ஆம் ஆண்டில் அமெரிக்க செல்வம், வளம், சுபிட்சத்தை ஒரு பெருநூலாக எழுதிய ஆசிரியர் “இன்று ஒருவன் இங்கு பட்டினி கிடந்தால் அவன் தன்னையேதான் நொந்து கொள்ள வேண்டும். அமெரிக்கப் பன்றிகளுக்கு இங்கிலாந்து (duchess) பணக்காரப் பெண்களைவிட, சிறந்த சாப்பாடுண்டு”.

❀ பலன் வசதியைப் பொருத்ததில்லை.

❀ பலன் முயற்சியைப் பொருத்தது.

*தொடரும்....*

❀ ❀ ❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

சமூகத்தை ஏற்றுக் கொள்ளும் மனிதனை, சமூகம் ஏற்றுக் கொள்கிறது. சமூகத்தின் திறனை தன்னுள் பெற்றிருப்-பவனை சமூகம் “தலைவன்’’ என ஏற்றுக் கொள்கிறது.

***ஊரை தன்னுள் காண்பவன் உள்ளுணர்வால் தலைவனாகிறான்.***



# இறைமுயற்சி தொடங்குமிடம்

என். அசோகன்

ஆன்மா தன்னுடைய கவலைகளை மறந்தபொழுது அக்கவலைகளெல்லாம் மறைந்து போயினஎன்பதை அறிந்த ஆன்மா, அது ஏன் அப்படி நடந்ததுஎன்று வியந்தது. ஆன்மாவின் அறியாமையைக் கண்டு இறைவன் சிரித்தார். ஸ்ரீ அரவிந்தருடைய பொன்மொழிகளில் ஒன்றில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. தனக்கு வந்துள்ள துன்பத்தைப்பற்றி மனிதன் நினைத்துக் கொண்டே இருப்பதால் அத்துன்பம் வலுவடைகிறதுஎன்பது ஓர் ஆன்மீக உண்மையாகும். இந்த ஆன்மீக உண்மை நம்முடைய அன்றாட வாழ்க்கையில் பயன்பட வழியேதுமுள்ளதா? இவ்வுண்மை பயன்படும் நிகழ்ச்சிகள் ஏராளமாக இல்லைஎன்றாலும், இவை அசாதாரணமும் இல்லை. டாக்டர் கைவிட்டபின் தீராத வியாதியிலிருந்து மனிதன் குணமடைகிறான். அந்நேரம் இத்தகைய நிகழ்ச்சிகள் வியப்பூட்டுவதாக இருந்தாலும், இவ்வியப்புணர்வைத் தாண்டி நம் அறிவு சிந்திப்பதில்லை. எப்படி இத்தகைய நிகழ்ச்சி நடந்ததுஎன்று புரிந்து கொள்ள யாரும் தீவிர சிந்தனை செய்வதில்லை. நம்முடைய அறிவையே நாம் இறுதிக் கருவியாக நினைக்கிறோம். அறிவுக்கும்பின்னால் ஆன்மாஎன்ற ஒன்று இருப்பதை நாம் கருதுவதில்லை.

கிருஷ்ணா நதிக்கரையில் தாம் வாங்கிய புதுக்காரை ஒரு வழக்கறிஞர் ஓட்டிக் கொண்டு போய்க் கொண்டிருந்தார். திடீரென்று கார் ஆற்று வெள்ளத்தில் இறங்கிவிட்டது. எப்படியோ காரின் கதவை திறந்து கொண்டு வெளியில் வந்து, கரை வரைக்கும் நீந்தி வந்து கரையில் விழுந்து, சுயநினைவை இழந்துவிட்டிருந்தார். இரு நாள்கள் கழித்து அவருக்கு சுயநினைவு மீண்டது. அவரைச் சூழ்ந்து நின்றவர்கள் எல்லோரும் அவருடைய அசாதாரண தைரியத்தைப் பாராட்டினார்கள். மேலும், எப்படிப் பிழைத்துக் கரைக்கு வந்தார் என்பதைத் தெரிந்துகொள்ள ஆர்வம் காட்டினார்கள். அவர்களுடைய கேள்விகளுக்கெல்லாம் அவரால் ஒரே பதிலைத்தான் வழங்க முடிந்தது. ‘‘எனக்கும் ஒன்றும் தெரியவில்லை. காரில் உட்கார்ந்தபடியே ஆற்றில்

விழுந்தது நினைவு இருக்கிறது. அடுத்ததாக இங்கே மருத்துவமனையில் இருப்பது தெரிகிறது. இடையில் என்ன நடந்தது என்று தெரியவில்லை" என்றார். ஆனால் என்ன நடந்ததுஎன்று நாம் யூகிக்கலாம். அறிவை நம்பிப் பிழைக்க முடியாது என்றநேரம் வரும் பொழுது உடம்பில் மறைந்து இருக்கும் ஆன்மா (உடம்பின் ஆன்மா) விழித்துக் கொண்டு உடம்பிற்கு அசுர பலத்தையும், மனிதனுக்கில்லாத அதிமானுட அறிவையும் வழங்கி உடம்பைக் காப்பாற்றுகிறது.

மனிதனுடைய ஆற்றல் (energy) தீரும் நிலை வரும்பொழுது, வேலைக்குண்டான நிலை (plane of works) ஆற்றலால் நிரப்பப்படுகிறது. அற்புதமான விளைவுகளுக்குக் காரணம் இதுதான். ஜேன் ஆஸ்டின் (Jane Austen) என்ற ஆங்கில எழுத்தாளருடைய நாவல் ஒன்றில் இளம்பெண் ஒருவர், ராணுவ அதிகாரி ஒருவருடன் ஓடிப்போய்விடுகிறாள். இதனால் திருமணமாகாத அவளுடைய மற்ற நான்கு சகோதரிகளுடைய எதிர்காலம் இருண்டு போகிறது. ஓடிப்போன காதலர்கள் ஸ்காட்லாந்திற்கு (Scotland) சென்றிருக்கலாம்என்று யூகம் செய்கிறார்கள். ஏனென்றால் அங்குள்ள திருமணச் சட்டங்கள் 18 வயதுக்குக் கீழுள்ள பெண்களையும் திருமணம் செய்து கொள்ள அனுமதிக்கின்றன. ஸ்காட்லாந்திற்குப் போவதற்குமுன் லண்டன் மாநகரத்தில் ஒளிந்து கொண்டிருக்கலாம்என்றும் சந்தேகம் இருந்தது. அவ்வளவு பெரிய மாநகரத்தில் ஒளிந்து கொண்டிருக்கும் தம் பெண்ணை விவசாயியான அவளுடைய தகப்பனார் எப்படித் தேடுவது? அவரும் தீவிர முயற்சிஎடுத்துவிட்டு நம்பிக்கையை இழந்தார். அவருடைய மைத்துனர் லண்டனில் வியாபாரம் செய்து கொண்டிருந்தார். கார்டினர் (Gardiner) என்ற பெயர் கொண்ட அவரும் தமக்குத் தெரிந்த முயற்சிகளை எடுத்துவிட்டு ஓய்ந்து போய் இருந்தார். பெண்ணின் தகப்பனாரும், மாமாவும் இனிமேல் முடியாது என்ற நிலைக்கு வந்து, அவரவர் வீட்டிற்குத் திரும்பி இருந்தார்கள். திடீரென்று ஒரு நாள் காலை இப்படி ஓடி வந்தவளின் சகோதரியான எலிஸபெத் என்பவளின் காதலன் டார்சி (Darcy) என்பவன் கார்டினரை அணுகி, ஓடிப்போன காதலர்களைத் தான் கண்டுபிடித்து விட்டதாகவும், இருவரையும் வீட்டிற்கு வரச் சொல்லி வற்புறுத்தியதாகவும் தெரிவித்தான். அது பலனளிக்காமல் போகவே லிடியா (Lydia) என்ற அந்தப் பெண்ணை அழைத்துக் கொண்டு ஓடிப்போன விக்காம் (Wickham) என்ற அந்த ராணுவ வீரனுக்கு ராணுவத்தில் ஒரு கமிஷண்ட் ஆபீஸர் (Commissioned Officer) பதவியை வாங்கிக் கொடுத்து, அவர்களுக்கு முறையாகத் திருமணமும் நடக்க ஏற்பாடு செய்துவிட்டதாகக் கூறுகிறான். அவன் கூறியபடியே திருமணமும் நடக்கிறது. மனித முயற்சி முடிகின்ற கட்டத்தில் இறைவன் தானே செயல்பட்டு காரியத்தை முடிப்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணமாகும்.



இம்மாதிரியே நம்முடைய தீராத பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளும் வகையில் நமக்குள் இருக்கும் இறைசக்தியை நாம் செயல்பட வைக்கலாம். இதற்கான முக்கிய அணுகுமுறை என்னவென்றால், ஒரு தீராத பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்என்று அறிவால் முயற்சி எடுப்பதை நாம் நிறுத்த வேண்டும்.

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

நடக்காதது நடந்தபொழுது - உதாரணமாகக் கெட்டுப்போன கல்லீரல் வேலை செய்ய ஆரம்பித்தால் - ஆச்சரியமும் நன்றியும் எழுகின்றன. பலனை ஏற்பது முதல் நிலை. நம்பிக்கை பலனளித்ததுஎன்பதை அறிவது நன்றியுணர்வு. மாறுதல்களின் பல நிலைகளை நுணுக்கமாக அறிவது ஞானம். எத்தகைய மாறுதல்கள் நல்ல பலனை ஏற்படுத்தின என்று அறிவது (process) மாறிய வகையை அறிவதாகும்.

***பலன் குறைந்தபட்சம்; புரிவது அதிகபட்சம்.***

# முரண்பாடுகள் உடன்பாடுகளாகும்

என். அசோகன்

நம்முடைய மானிட வாழ்க்கை பாஸிட்டிவ், நெகட்டிவ்என்ற எதிர்மறைகளால் நிறைந்துள்ளது. இப்படிப்பட்ட எதிர்மறைகள் நல்லது X கெட்டது, உண்மை X பொய்மை, வெற்றி X தோல்வி, வளமை X வறுமை, சுதந்திரம் X கட்டுப்பாடு, இன்பம் X துன்பம், வாய்ப்புகள் X பிரச்சினைகள்என்ற பல தரப்பட்டவைகளாக உள்ளன.

இப்படி எதிர்மறைகளாகத் தெரிபவைகளில் நமக்குப் பிடித்தமான நல்லது, உண்மை, வெற்றி, வளமை, சுதந்திரம், வாய்ப்புகள், இன்பம் போன்றவற்றை நாம் ஏற்றுக் கொண்டு பொய்மை, தோல்வி, வறுமை, பிரச்சினைகள், துன்பம் ஆகியவற்றை வேண்டாமென்று ஒதுக்கிவிடுகிறோம்.

முழுமையான நன்மை மற்றும் முழுமையான உண்மைஎன்பவை சத்தியஜீவிய நிலையில்தான் தென்படுகின்றனவேயொழிய நம்முடைய மானிட நிலையில் இல்லை. நாம் இருக்கின்ற பூவுலக பிஸிக்கல் நிலையில் நன்மை, மற்றும் உண்மை மட்டுமே இருக்க வேண்டும் என்பது இரவில்லாத பகல் மட்டுமே வேண்டும்என்பதற்குச் சமம். சச்சிதானந்த நிலையில் வலியின் சுவடே தெரியாத ஆனந்தம்மட்டும் உண்டு. ஆனால் நம்முடைய உடம்புஎன்ற நிலையில் வலிஎன்ற உணர்வு நமக்கு அவசியம் தேவை. உடம்பைக் காயப்படுத்தும் வேலைகளை நாம் செய்யும்பொழுது வலிஎன்ற உணர்வு மூலம்தான் உடம்பு தனக்குக் காயம் ஏற்படுகிறதுஎன்ற எச்சரிக்கையை நமக்குத் தருகிறது. இந்த வலியே இல்லாவிட்டால் நம் உடம்பைக் காயப்படுத்திக் கொள்ளக்கூடிய பல அறிவில்லாத செயல்களை நாம் செய்ய ஆரம்பித்துவிடுவோம். நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட பல பேர் தம்முடைய காலில் வலியை உணரக்கூடிய திறனையே இழந்து விடுகிறார்கள். அவர்களுக்குக் காலில் முள் குத்தினாலும் தெரிவதில்லை, காலில் சூடு பட்டாலும் தெரிவதில்லை.



இதன்படிப் பார்க்கும்பொழுது வலிஎன்ற உணர்வு இன்பத்திற்கு எதிரானதாகத் தெரிகிறதேயொழிய உண்மையில் அது நமக்கு நல்லதுதான் செய்கிறது. நம் உடம்பு முழுமையாக சத்தியஜீவிய மயமாகும் பொழுதுதான் நமக்கு வலிஎன்ற உணர்வே தேவை இல்லாமல் போகும். சத்தியஜீவிய உடம்பு வளைந்து கொடுக்கக்கூடிய தன்மை உடையதுஎன்று அன்னை கூறுகிறார். ஆகவே எப்பேற்பட்ட அடி விழுந்தாலும் நம்முடைய உடம்பு அதற்கேற்றபடி வளைந்து கொடுப்பதால் காயம் படாமல் அதனால் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

இப்படி எதிர்மறையாக மேலோட்டமாகத் தென்படுகின்ற இன்பம், துன்பம்என்ற உணர்வுகள் உண்மையில் உடன்பாடுகளாகச் செயல்படுவதுபோல மற்றும் சில எதிர்மறைகளும் உண்மையில் உடன்பாடுகளாகச் செயல்படுகின்றன. கட்டுப்பாடேயில்லாத சுதந்திரம் உண்மையில் நமக்கு நல்லது செய்யாது. அந்தக் கட்டுப்பாடும் இல்லாத சூழ்நிலையில் பல பேர் வாழ்க்கையில் குறிக்கோளையே இழந்து தம் இஷ்டத்திற்குச் செயல்பட்டுத் தம் வாழ்க்கையையே வீணாக்கிக் கொள்வார்கள். இதன்படிப் பார்க்கும்பொழுது நமக்குத் தேவையான இடங்களில் சுதந்திரமும், எனர்ஜி வீணாகக்கூடிய இடங்களில் கட்டுப்பாடும் தேவையென்று தெரிகிறது.

வாழ்க்கையில் நாம் வெற்றி பெறுவதையும், அதற்குண்டான வாய்ப்புகளையும் வரவேற்கிறோம். ஏனென்றால் இவற்றால் நமக்கு முன்னேற்றம் வருகிறது. ஆனால், பிரச்சினைகளையும், தோல்விகளையும் நாம் வரவேற்பதில்லை. ஏனென்றால், நம் முன்னேற்றம் இவற்றால் தடைபடுவதாக நினைக்கின்றோம். ஆனால் இத்தகைய கண்ணோட்டம் நாம் வாழ்க்கையை மேலோட்டமாகப் பார்ப்பதாக அறிவிக்கிறது. நமக்குவரும் பிரச்சினைகளும், தோல்விகளும்தான் நம்முடைய குறைபாடுகளை உணர்த்துகின்றன. இக்குறைபாடுகளை உணர்வதன் மூலம் அவற்றை அகற்றி, நம்முடைய பர்சனாலிட்டியை நம்மால் மேம்படுத்திக்கொள்ள முடிகிறது. தொழிலில் நஷ்டப்படுவதை யாரும் விரும்புவதில்லை. ஆனால் அப்படி நஷ்டப்படும் பொழுது தொழிலில் நாம் என்ன தவறு செய்கிறோம்என்பதை உணர முடிகிறது. தவறுகளையெல்லாம் திருத்திக் கொள்கின்றவர்கள்

இறுதியில் தொழிலைத் திறம்பட நடத்தி, மற்றவர்களைவிட அதிக இலாபம் சம்பாதிப்பார்கள்என்பதும் உண்மை.

வருமானத்தை நாம் வரவேற்கிறோம். ஆனால் செலவை நாம் வரவேற்பதில்லை. வருமானம்என்றால் நம்முடைய கையிருப்பு கூடுகிறது. செலவுஎன்றால் நம்முடைய கையிருப்புக் குறைகிறது. அதனால் முதலாவதை வரவேற்கிறோம், இரண்டாவதை வரவேற்பது இல்லை. ஆனால், இத்தகைய கண்ணோட்டம் ஒரு மேலோட்டமான கண்ணோட்டம்தான். வருமானமும், செலவும் ஒன்றோடொன்று நெருக்கமான தொடர்புடையவை. நாம் சம்பாதிப்பதே செலவு செய்வதற்குத்தான். செலவுசெய்ய அவசியம் இல்லைஎன்றால் நாம் சம்பாதிக்கவே தேவையில்லை. சம்பாதிக்க விரும்புகின்றவர்கள்கூட செலவு செய்துதான் சம்பாதிக்க முடியும். ஒரு தொழில் செய்து சம்பாதிக்க விரும்புகின்றவர் இந்தத் தொழிலுக்குத் தேவையான மூலப் பொருள்கள், எந்திரங்கள் மற்றும் அந்தத் தொழிலில் ஈடுபடும் தொழிலாளிக்கான சம்பளம்என்று இவை சம்பந்தப்பட்ட செலவுகளை ஏற்காமல் அந்தத் தொழிலையே செய்ய முடியாது. அவசியமான மற்றும் முறையான செலவுகளுக்காக நாம் பணத்தைச் செலவு செய்யும் பொழுது மேற்கொண்டு பணம் நம்மை நோக்கி வருமென்று அன்னை சொல்கிறார். கிணற்றிலிருக்கின்ற நீரை நாம் வெளியேற்றும்பொழுது புது ஊற்று நீர் கிளம்பி, கிணற்றின் எல்லாப் பக்கங்களிலிருந்தும் சுரந்துவந்து காலியிடத்தை நிரப்புகிறது. இருக்கின்ற நீரை வெளியேற்றாமல் புது ஊற்றுச் சுரக்கப்போவதில்லை. இம்மாதிரியே இருக்கின்ற பணத்தைச் செலவு செய்யும்பொழுது அந்தக் காலியிடத்தை நிரப்புவதற்காகப் புதிய பணம் நம்மை நாடி வருகிறது.

ஸ்ரீ அரவிந்தர் தம்முடைய Life Divine புத்தகத்தில் எதிர் எதிராகச் செயல்படும் சக்திகள் ஒன்றிணையும்பொழுது பலன் கிடைப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். இயற்கை ஜடத்தையும், உயிரையும் இணைத்து உயிரினங்களைத் தோற்றுவித்திருப்பது உண்மையிலேயே ஓர் அற்புதமாகும். ஜடத்திற்கு வடிவமுண்டு, உயிருக்கு வடிவம் கிடையாது. இவை இரண்டும் எதிரெதிரான தன்மை உள்ளவை. ஆனால், இவை இரண்டும் ஒன்றிணையும்பொழுது உயிருள்ள உடம்பு பிறக்கிறது. இம்மாதிரியே ஜடமான மூளையிலிருந்து இயற்கை, அறிவை



உற்பத்தி செய்துள்ளது. இதுவும் ஓர் அற்புதமாகும். இதே ரீதியில் வருங்காலத்தில் உடம்பில் ஆன்மா வெளிப்படுவதற்கும் வாய்ப்பு உள்ளது. அந்தத் திசையில்தான் பரிணாமவளர்ச்சியும் நகர்ந்து கொண்டிருக்கிறது.

நம்முடைய அறிவினுடைய கண்ணோட்டம் குறுகியதுஎன்பதால் எதிரெதிரான சக்திகள் ஒன்றோடொன்று உடன்பட்டு செயல்படும் என்பதை நம் அறிவால் ஏற்க முடிவதில்லை. இம்மாதிரியே ஓர் உண்மைக்கு இரண்டு மாறுபட்ட பக்கங்கள் இருக்கும் என்பதையும் நம் அறிவால் நம்ப முடிவதில்லை. பிரம்மத்தை எடுத்துக் கொண்டால், வடிவமில்லாத சச்சிதானந்தமாகவும் அதனால் இருக்க முடியும். அதே சமயத்தில் எண்ணற்ற வடிவங்களாக ஜட நிலையில் வெளிப்படவும் முடியும். ஆனால் நம்முடைய அறிவிற்கோ இவை இரண்டு மாறுபட்ட வெளிப்பாடுகளும் ஒரே பிரம்மத்தினுடைய இரு வேறு வெளிப்பாடுகள் என்பது ஏற்க முடியாததாக உள்ளது. இரண்டும் நேரெதிராக இருப்பதால் நம்முடைய அறிவு சச்சிதானந்தம்தான் இறைமயமானது என்றும், உலகம் இறைமயமானதில்லையென்றும் வாதாடுகின்றது.

ஆனால், நம்முடைய அறிவின் கண்ணோட்டத்தை விட்டுவிட்டு ஆன்மாவின் கண்ணோட்டத்தை ஏற்றோமென்றால், சச்சிதானந்தமும் ஜடமான படைப்பும் ஒன்றோடொன்று உடன்பாடானவைஎன்பது விளங்கும். சச்சிதானந்தம் அசையாத பிரம்மத்தைக் குறிக்கிறது. படைப்பு அசையும் பிரம்மத்தைக் குறிக்கிறது. இப்படி அசையாத பிரம்மமும், அசையும் பிரம்மமும் இணையும்பொழுதுதான் பிரம்மமே முழுமை பெறுகிறது. வடிவமில்லாத பிரம்மம் எண்ணற்ற வடிவங்களை உண்டுபண்ணிக்கொண்டே இருக்கிறது. அதனுடைய மௌனத்தி-லிருந்து இடைவிடாத இயக்கம் பிறந்துகொண்டேயிருக்கிறது. பிரம்மத்தினுடைய வடிவமின்மைதான் வடிவத்தின் மூலம்என்றோ, அதனுடைய மௌனம்தான் இடைவிடாத இயக்கத்தின் பிறப்பிடம் என்றோ நம் அறிவிற்குப் புரியாமல் இருக்கிறது. நம் அறிவிற்குப் புரிகிறதோ, இல்லையோ, இதுதான் உண்மை. நம்முடைய நிலையில் தெரிகின்ற எல்லா முரண்பாடுகளும் பிரம்மம்என்ற உயர்ந்த நிலையில் மேற்சொன்ன வகையில் உடன்பாடுகளாக மாறுகின்றன.

❀ ❀ ❀

# லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XVIII. Mind and Supermind

Avidya is the fall of mind from Supermind. Page No.167
The idea of real division originally proceeds from Avidya. Para No.13
From where does this Avidya originates?
What exactly is the perversion of the Supermind?
It proceeds from the view of the individual soul.
It is a view from its own standpoint.
It excludes all others.
It proceeds from an exclusive concentration of consciousness.
It is an exclusive self-identification of the soul.

It identifies with a particular action.
It is a particular action to Time and Space.
It is only a part of its own play of being.
It starts from the soul's ignoring all others.
It ignores all other action as its own action.

All other states of being are its own state of being.



## 18. மனமும் சத்தியஜீவியமும்

மனம் சத்தியஜீவியத்தை இழப்பது அவித்தை.
பிரிவினைஎன்ற எண்ணம் முதலில் அவித்தையிலிருந்து வருகிறது.

அவித்தையின் ஆரம்பம் எது?
சத்தியஜீவியம் குதர்க்கமாவது எப்படி?
அது ஜீவாத்மாவின் கண்ணோட்டத்திலிருந்து எழுகிறது.
ஜீவாத்மா உலகைத் தன் நோக்கில் காணும்.
அது மற்றவற்றை விலக்கும்.
ஜீவியம் தன்னில் நிலைப்பதால் அது வருகிறது.

ஆத்மா தன்னோடு தன்னை ஐக்கியப்படுத்தித் தீவிரமாதலால் அது எழுகிறது.
அது ஒரு செயலுடன் தன்னை ஐக்கியப்படுத்தும்.
அச்செயல் காலம், இடத்திற்குரியது.
அது ஜீவனின் லீலையின் பகுதி.
ஆத்மா அனைவரையும் மறப்பதால் அது வருகிறது.
பிறர் செயல்களை அது புறக்கணிக்கிறது. தன் செயலன்றுஎனக் கூறுகிறது.
மற்ற ஜீவனின் நிலைகள் தன் ஜீவனின் நிலையாகும்.

All other consciousness is its own consciousness.
It occupies one particular moment in Time.
It occupies one particular moment of Space.
It occupies one particular form.
It concentrates on the moment, field, the form, the movement.
So, it loses all the rest.
It has then to recover the rest.
It does so by linking the succession of moments.
It also does so by linking the succession of points of Space.
The succession of forms in Time and Space are also linked.
The succession of movements in Time and Space are also so linked.
It has thus lost the truth of the indivisibility of Time.
Force and Substance are also so indivisible.
There is an obvious fact.
It is all minds are one Mind.
It takes many standpoints.
All lives are one Life.
It develops many currents of activities.
All body and form are one substance of Force and Consciousness.
It concentrates into many apparent stabilities of force of consciousness.
We forget these obvious facts.
The truth is different.
All these stabilities are really one whorl of movement.
It repeats a form while it modifies it.
They are nothing more.
Mind tries to fix everything rigidly.
It becomes a rigid unchanging or unmoving external factor.



மற்றவர் ஜீவியம் தம் ஜீவியம்.
அது காலத்தில் ஒரு பொறியை ஏற்கிறது.
அது இடத்தில் ஒரு பொறியை ஏற்கிறது.
அது ஒரு ரூபத்தை ஏற்கும்.
அது ரூபத்திலும், அசைவிலும், அரங்கத்திலும், மணித்துளியிலும் நிற்கும்.

எனவே மற்ற அனைத்தையும் அது இழந்துவிடுகிறது.
இழந்ததைப் பெற வேண்டும்.
தொடரும் நேரத்தைத் தொடர்புபடுத்தி அதைச் செய்கிறது.
இடத்தையும் அப்படியே செய்யும்.
காலத்திலும் இடத்திலும் ரூபத் தொடர்புகளை அது பயன்படுத்துகிறது.
காலத்திலும் இடத்திலும் சலனத் தொடர்புகளை அப்படி அது பயன்படுத்தும்.
இவ்வழி அது காலத்தின் முழுமையை இழந்துவிட்டது.
சக்தியும், பொருளும் முழுமையுடையவை.
இது தெளிவு.
எல்லா மனங்களும் ஒரே மனம்.
மனம் பல நோக்கங்களை ஏற்கிறது.
எல்லா உயிர்களும் ஒரே உயிர்.
அது பல செயல்களை உற்பத்திச் செய்கிறது.
எல்லா உடல்களும் ரூபங்களும் ஒரே சக்தியின் ஒரே ஜீவியத்தின் பொருள்.
தோற்றத்தில் பல ஜீவிய சக்திகளாக அவை தங்களை நிலைநாட்டுகின்றன.
நாம் இவற்றை மறந்துவிடுகிறோம்.
உண்மை வேறு.
இத்தனி நிலைகள் எல்லாம் ஒரே பிரவாகத்தின் பல அசைவுகள்.
ஒரு ரூபத்தை மீண்டும் செய்யும்பொழுது ரூபத்தை அது மாற்றுகிறது.
அவை வெவ்வேறல்ல.
மனம் எல்லாவற்றையும் இறுக்கிப் பிடிக்கும்.
மாறாத, அசையாத புறச் செயலாகிறது அது.

Only the eternal Real-Idea is firm.
It maintains a certain ordered constancy.
The Mind vainly attempts to initiate it.
It does so by attributing fixity to that which is inconstant.
These truths Mind has to rediscover.
It knows them all the time.
It knows only in the hidden back of consciousness.
It is the secret light of its self-being.
And that light is to it a darkness.
Because it has created ignorance, it is dark.
Because the dividing mind has become the divided mind.
Because it has become involved in its own workings.
Those workings are its own creation.

The ignorance is further deepened. Page No.168
It is by his self-identification with the body. Para No.14
To us mind is determined by the body.
Mind is preoccupied with that.
Mind is devoted to its physical workings.
It uses it for its conscious superficial action.

Mind works in this gross material world.
Mind has developed the brain and nerves.
It did so in the course of developing the body.
Rather it is its own development in the body.
Still, it employs constantly that operation.
It is too absorbed in observing this machinery.

It knows what body gives to it.
It has to get back from it to its own proper workings.
These are to it mostly subconscious.



நிலையான முழு எண்ணமே உறுதியானது.
அது ஒழுங்கான, நிலையான ஓட்டத்தை ஏற்படுத்துகிறது.
மனம் அதைப் பார்த்து, செயல்பட முயன்று தோற்கிறது.
நிலையற்றதை நிலையாக்கி, அதைச் சாதிக்க முயல்கிறது.
மனம் இவ்வுண்மைகளை மீண்டும் பெறவேண்டும்.
மனம் அவற்றையறியும்.
தன் ஜீவியத்தின் பின்னணியில் அது அறியும்.
தன் சுயஜீவனின் இரகஸ்ய ஒளி அது.
அவ்வொளி அதற்கு இருள்.
அது அறியாமையை சிருஷ்டித்ததால், அது இருட்டாக இருக்கிறது.
தன்னில் தன்னையிழப்பதால் அது இருட்டாக இருக்கிறது.
தன்செயலுள் தான் தன்னை மறந்ததால் அது நிகழ்கிறது.
அதன் செயல் அதன் சிருஷ்டி.

அஞ்ஞானம் ஆழ்ந்து கனக்கிறது.
உடலோடு உடலானால் அஞ்ஞானம் இருளாகும்.
உடல் மனத்தை நிர்ணயிப்பது நம் கருத்து.
அவ்வெண்ணம் மனத்தை ஆக்ரமித்துக் கொண்டுள்ளது.
மனம் கையால் செய்யும் வேலைகளைப் பாராட்டுகிறது.
விழிப்பாக மேலெழுந்த காரியத்தைச்செய்ய மனம் அதைப் பயன்படுத்துகிறது.
மனம் ஜடமான இவ்வுலகில் செயல்படுகிறது.
மனம் மூளையையும், நரம்பையும் வளர்த்துள்ளது.
உடலை வளர்க்கும்பொழுது இவற்றையும் செய்துள்ளது.
மனம் இவ்வகையாக உடலில் வளர்கிறது.
இருந்தாலும், இவற்றை எப்பொழுதும் மனம் பயன்படுத்துகிறது.
இந்த யந்திரம் செயல்படுவதைக் கவனிப்பதில் மனம் தன்னை இழக்கின்றது.
உடல் என்ன தருகிறதுஎன மனம் அறியும்.
உடலிலிருந்து மனம் தனக்கேயுரிய செயல்களை நாடவேண்டும்.
இவை மனத்தைப் பொருத்தவரை ஆழ்ந்து அமிழ்ந்துள்ளன.

Still we can conceive a life mind.
Or a life being.
This absorption is an evolutionary necessity.
The life mind and being go beyond that.
It is able to see and experience itself assuming body after body.
It knows it is not created separately in each body.

Nor does it end with it.
It is only the physical impress of the mind on matter.
It is only the corporeal mentality that is so created.
It is not the whole mental being.
This corporeal mentality is only our surface being.
It is a front that is presented to physical experience.
Ours is the terrestrial being.
Behind there is the other.
It is subconscious and subliminal to us.
It knows itself as more than the body.
It is capable of less materialised action.
To this we owe the action of our surface mind.
Its action is larger, deeper, forceful and dynamic.
We can become conscious of it.
Or, we can receive its impress on us.
It is our first idea of the soul.
It is our first realisation of our inner being.
It is the Purusha – pranamaya purusha.

This is life mentality. Page No.169
It may get free from the error of the body. Para No.15
It does not make us free from the error of mind entirely.



நாம் உயிருக்குரிய மனத்தைக் கருதலாம்.
அல்லது உயிருக்குரிய ஜீவனைக் கருதலாம்.
மனம் தன்னையிழப்பது பரிணாமத்திற்கு அவசியம்.
உயிரின்மனமும், ஜீவனும் அதைக் கடந்தவை.
உடலைவிட்டு உடல்மாறி அனுபவிப்பதை அதனால் காண முடிகிறது.

ஒவ்வோர் உடலிலும் தான் புதியதாகப் பிறக்கவில்லையென மனம் அறியும்.
அத்துடன் மனம் முடியவில்லை.
உயிரின்மனம்என்பது ஜடத்தில் மனம் எடுத்த அச்சு.
அப்படி உற்பத்தியானது உடலின் சிந்தனை.
இது மனத்தின் முழு ஜீவனாகாது.
உடலின் சிந்தனை மேலேயுள்ளது.
உடலின் அனுபவம்பெற அதை முன்வைக்கின்றது.
நம் மனம் புவியின் ஜீவன்.
அதன்பின் வேறொன்றுள்ளது.
அது ஆழத்திலும் அடியிலும் உள்ளது.
அது உடலைவிடப் பெரியதுஎன அறியும்.
அது தன் ஜடத்தன்மையைக் குறைக்கும்.
மேல்மனம் செயல்படுவது இதனால்.
அகன்று, ஆழ்ந்து, தீவிரமாக, வேகமாக அது செயல்படும்.
நாம் அதை அறியலாம்.
நம்மில் அதன் சுவட்டைப் பெறலாம்.
ஆத்மாஎன நாம் முதலில் அதையேயறிகிறோம்.
நம் உள்ளுறை ஜீவன் நமக்குச் சித்திப்பதின் முதற்கட்டம் இது.
இது புருஷன் – பிராணமயப்புருஷன்.

இது வாழ்வின் மனப்போக்கு.
இது உடலின் குறையிலிருந்து தப்பிக்கலாம்.
அதனால் மனத்தின் குறையிலிருந்து முழுவதும் தப்பிக்க முடியும்எனக் கூற முடியாது.

It is still subject to the original act of ignorance.
That ignorance makes the individual soul regard everything from its own point of view.
It can see the truth of things only as an external presentation.
It does so as they rise up to its view from its temporal and spatial consciousness.
Its forms and results of past and present experience determine that external view.
It is not conscious of its other selves.
It knows them by an outward indication.
It is not felt directly by the physical being.
They are indications of thought, speech, action, result of action or subtler indications.
It is of the vital impact and relation.

Equally it is ignorant of itself.
It knows itself only through a movement of Time.
It knows by a succession of lives.
In them it has used variously embodied energies.
Our physical instrumental mind has the illusion of the body.
This subconscious dynamic mind has the illusion of life.

In that it is absorbed and concentrated.
By that it is limited.
With that it identifies its being.
Here we do not yet get back to the meeting place of mind and Supermind.
That was the point at which they originally separated.

*Contd....*

❀ ❀ ❀



இன்னும் அறியாமையின் ஆரம்பம் அதைப் பாதிக்கும்.
அவ்வறியாமை ஜீவாத்மா அனைத்தையும் தன் கோணத்தில் பார்க்கச் செய்யும்.
விஷயத்தின் சத்தியத்தை மனம் புறமாக, புறவெளிப்பாடாகக் கருதுகிறது.

காலம், இடத்தின் ஜீவியப் பார்வையிலிருந்து தன் இடத்திற்கு அவை வருவதால் மனம் அப்படி நினைக்கிறது.
கடந்தகால, தற்கால அனுபவத்தின் ரூபங்களும் பலன்களும் அதன் புற நோக்கை நிர்ணயிக்கும்.
மனத்தால் பிற ஜீவன்களை அறிய முடியாது.
அவற்றைப் புற நிகழ்ச்சிகளால் மனம் அறிகிறது.
உடலின் ஜீவனால் நேரடியாகப் பிறரை அறிய முடிவதில்லை.
எண்ணம், பேச்சு, செயல், செயலின்பலன், சூட்சுமஅறிகுறிகள் மூலம் மனம் பிறரை அறிகிறது.
உயிரின் உணர்வு தொடர்பு கொள்வதாலும், பாதிப்பதாலும் அறிய முடிகிறது.
அதேபோல் மனம் தன்னையும் அறியாது.
காலத்தின் கதியால் அது தன்னையறியும்.
தொடர்ந்த பிறப்பால் மனம் தன்னையறிகிறது.
அப்பிறவிகளில் பலதரப்பட்ட சக்தி ரூபங்களை அது பயன்படுத்துகிறது.
உடலெனும்கருவி உடலே முடிவுஎன்ற மாயையில் திளைக்கிறது.
ஆழ்மனம் தீவிரமாகச் செயல்படும்பொழுது அது உயிரை அப்படி நம்புகிறது.
அவற்றுள் மனம் கரைந்து, செறிவு பெற்றுள்ளது.
அவற்றால் மனம் கட்டுக்கோப்புக்குள் அமைகிறது.
தன் ஜீவனை அத்துடன் இரண்டறக் கலக்கிறது.
இங்கு நாம் சத்தியஜீவியமும், மனமும் சந்திக்குமிடத்திற்கு வரவில்லை.

அவ்விடத்தில் மனம் ஆரம்பத்தில் சத்தியஜீவியத்தினின்று பிரிந்தது.

*தொடரும்....*

❀ ❀ ❀

# தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

81. *உள்ளத்தில் மகிழ்ச்சி உண்டானால் முகத்தில் அழகு உண்டாகும்.*

✡ **ஆத்மாவில் அதிர்ஷ்டம் உண்டானால்**
**மனத்தில் அன்னை நினைவு எழும்.**

82. *ஓடும் ஆற்று நீருக்கும் தொடக்கமாக ஓர் ஊற்று இருக்கும்.*

✡ **அன்பர்கள் மட்டும் வாழும் ஊரில் ஓடும் ஆறு ஜீவநதியாகும்.**

83. *சினம் தன்னைத் தானே தண்டித்துக் கொள்ளும்.*

✡ **சினத்திற்கும் தண்டனையில்லைஎன்பது அன்னைச் சூழல்.**

84. *கோபத்திற்கு கண்ணில்லை.*

✡ **கோபமும் பிரியமாகும் அன்னைநினைவு.**

85. *கேடு தானாகவே தேடி வரும்.*

✡ **அன்னையை நோக்கிச் சென்றால் கேடு தானாக வெளியேறும்.**

*தொடரும்....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

தீர்ந்தபின், ஆர்வத்தை உற்பத்தி செய்வது பெரும்பாடு. மனம் மறந்துவிடும். வற்புறுத்தினால், ''வற்புறுத்துவது தவறு'' என்று மனம் பதில் சொல்லும். அல்லது ''புரியவில்லை'' என்று சொல்லும்.

***ஆர்வம் தீர்ந்தால் செய்வதொன்றில்லை.***
***மனம் வற்புறுத்த அனுமதிக்காது.***



# குறையை உணரும் தாழ்ந்த மனம்

கர்மயோகி

*The Mother* என்ற நூலில் விலக்க வேண்டிய 27 குறைகளை மனம், உயிர், உடல்எனப் பகவான் பிரிக்கிறார். அவற்றுள் உடலுக்குரிய குறையொன்றை doubt ஐயம்எனக் குறிப்பிடுகிறார். உயிருக்குரிய குறையொன்றை suspicion, சந்தேகம்என்கிறார். இந்த 27 குறைகளையும் விலக்க முற்படுவது பெருமுயற்சி. அவற்றுள் இவையிரண்டு. விவரம் தெரியாமல் எழுவது ஐயம் doubt. மனிதனை நம்ப முடியாமல் எழும் மனநிலை சந்தேகம் suspicion.

✡ வலிய உதவப்போவது அறிவின்மை, அது தொந்தரவில் முடியும்.

✡ The unregenerate vital does not like to be under an obligation. நாகரீகமற்ற உணர்ச்சி பிறருக்குக் கடமைப்பட விரும்புவதில்லை - ஸ்ரீ அரவிந்தர்.

✡ பிறர் கர்மத்தில் தலையிட நமக்குரிமையில்லை - அன்னை.

✡ உதவி செய்யப்போனால், உபத்திரம் வரும் - பழமொழி.

✡ உதவியைக் கேட்டால், கேட்பவரைக் கணித்து உதவுவது சரி. நாமாக உதவ முன் வரக்கூடாது.

✡ கேட்பதற்குமுன் கொடுப்பது நாகரீகம்என்பது பண்புள்ள மக்களிடம் பழகும் முறை. மேற்சொன்னவை எளிய மக்கள் மனநிலை.

✡ இவற்றை மீறி ஒருவர் நடந்தால் பலன் எதிராக வரும். அதிகபட்சம் கிடைத்தால் "புத்தி" வரும். வழக்கில் அதற்கு புத்திகொள்முதல் எனப் பெயர்.

*இவ்வளவையும் புறக்கணித்து ஒருவர் மனம் கேட்காமல் உதவினால், அந்த நல்லெண்ணத்திற்குரிய பலன் தவறாது வரும். அதில் புதைந்துள்ள அறியாமைக்குரிய பலனும் அவசியம் வரும்.* பிறருக்கு உதவும் பழக்கமுள்ளவர்க்கே இவை பிரச்சினை. சுயநலமான மனிதன் வாழ்வில் இந்த இக்கட்டான நிலை எழுவதில்லை. ஏனெனில் அவனுக்கோ பிறருக்கு உதவும் எண்ணம் எழுவதில்லை. டிராலப்

கதையில் இது சம்பந்தமான நிகழ்ச்சியொன்று வருகிறது. அது நேரடியாக மேற்சொன்ன கருத்துகளைப் பிரதிபலிக்காது. தலைப்பைப் பிரதிபலிக்கும். கடன் வசூலாகாத நிலையில் தத்தளிப்பவர் பலர். அதற்குரிய காரணங்கள் பல. அவற்றுள் ஒன்றை இந்த நிகழ்ச்சி விளக்கும். மேற்சொன்ன கருத்துகளை அந்நிகழ்ச்சி நேரடியாக விளக்காவிட்டாலும், *இவற்றின் உட்பொருளைச் சுட்டிக்காட்டும்.*

Finn ஃபின் என்பவர் அயர்லாந்து M.P. அவருக்குச் சொற்ப வருமானம். அரசியல் செல்வாக்கால் M.P. ஆனார். அந்த நாட்களில் M.P.க்கு சம்பளமில்லை. அவர் நண்பர் சர்க்காரில் Under Secretary ஆபீஸர். £1000 வருஷச் சம்பளம் உள்ளவர். 40க்கு மேற்பட்ட வயது. திருமணமாகவில்லை. பணக்காரக் குடும்பம். இவருக்குச் சொத்தில்லை, ஊதாரி. சொந்தமான வருமானமில்லை. சகோதரிக்குப் பெரிய வருமானம் உண்டு. இந்த ஆபீஸர் நண்பர் தாம் பெற்ற கடனுக்கு Finn ஃபின்னை ஜாமீன் கையெழுத்திடும்படிக் கேட்கிறார். ஃபின் மறுக்க முடியாமல் கையெழுத்திடுகிறார். 3 மாத தவணை காலாவதியான உடன் வட்டிக் கடைக்காரன் தொகையை வசூலிக்க ஃபின்னிடம் வருகிறான். அடிக்கடியும் வருகிறான். ஃபின் M.P.யாக இருப்பதால் கைது செய்ய முடியாது. கடன் வாங்கியது ஆபீஸர் நண்பர். வட்டிக் கடைக்காரன் ஃபின் உயிரை எடுக்கிறான். ஃபின்னால் பொறுக்க முடியவில்லை. நண்பர் கேட்கும் கேள்விக்குப் பராமுகமாகப் பதில் சொல்கிறார். Finnக்கு உயிர் போகிறது. வாழ்க்கை நரகமாகி விட்டது, சிம்மசொப்பனமாகியது. ஆபீஸர் சகோதரி இதைக் கேள்விப்பட்டு Finn ஃபின்னிடம் வந்து, "நீங்கள் என் சகோதரனுக்குக் கடன் கொடுத்தீர்களா?" எனக் கேட்கிறார். "இல்லை" என்று கூறுகிறார். பிறகு வட்டிக் கடையில் விசாரித்து, சகோதரன் கடனைக் கட்டிவிடுகிறாள். Finnக்குப் பெருந்தலைவலி, சித்ரவதையாக இருந்தது விடுதலை கிடைக்கிறது.

> Finnக்கு வருத்தம், கவலை, அவள்மீது கோபம் வருகிறதுஎனக் கதாசிரியர் கூறுகிறார்.

Finn ஃபின் மனநிலை எனக்கு விளங்கவேயில்லை.



கதாசிரியரே பிறகு விளக்கம் தருகிறார். Finn ஒரு M.P. அயர்லாந்திலிருந்து இலண்டன் வந்திருக்கிறார். கடன் தொகை £250. ஃபின்னுக்கு வருமானமில்லை. தகப்பனார் அதிக வருமானமில்லாத டாக்டர். அலவன்ஸாக £250 வருஷம் தருகிறார். இந்தக் கடனை கட்டும் திறன் ஃபின்னுக்கு இல்லை. ஆனால் இக்கடனை ஆபீஸர் சகோதரி அடைத்தது ஃபின்னுக்குக் கோபம். அவர் வந்து கடனை அடைப்பதால் தனக்கு (Finn) அக்கடனை அடைக்கும் அளவு வருமானமில்லையென்று தெரிந்துவிடுகிறது.

> தன் ஏழ்மைநிலை வெளிவந்துவிட்டதுஎன Finn வெட்கப்பட்டு, கோபப்படுகிறார்.

தான் மாட்டிக்கொண்ட சிக்கலிலிருந்து தப்ப ஆபீஸர் சகோதரி உதவியதால் அவருக்கு நன்றி சொல்வது ஃபின் கடமை. ஆனால் அவர்நிலை வறுமையானது. அது வெளிப்படையாகிவிட்டதுஎன்பதால், கடனை அடைத்தவர் மீது கோபப்படுகிறார். அவரை வருத்தம் சூழ்ந்து கொள்கிறது.

1920 வாக்கில் ஜே. கிருஷ்ணமூர்த்திஎன்ற இளைஞர் பிரபலமாகி World Teacher ஜகத் குருஎனப் பெயர் வாங்கினார். அவரைத் தேடி அன்று 6 கோடி ரூபாய் நன்கொடையாக வந்தது. அவர் ஏற்கவில்லை. திருப்பிக் கொடுத்துவிட்டார். அவர் அடிக்கடி கூறும்சொல் ஒன்றுண்டு. அதாவது,

**You are hurt by your own position.**

***உன் குறையால் உனக்குக் கோபம் வருகிறது.***

நம் குறை நம்மை பாதிப்பதால், நமக்குப் பிறர்மீது கோபம் வருகிறது. கோபம் வருவதற்கு இது ஒரு முக்கிய காரணம்.

> இப்படிப்பட்ட குறையுள்ளவர் தம் அந்தஸ்திற்கு மேற்பட்டவருக்குக் கடன் கொடுத்தால், அக்கடனை எளிதில் வசூல்செய்ய முடியாது.

*பணம் வலிமையுள்ள இடத்தை நோக்கிப் போகும். எளிமையான இடத்தை நோக்கி எளிதில் நகராதுஎன்பது சட்டம்.*

- ✡ அதனுள் ஒரு காரணம் கடன் பெற்றவர் உயர்ந்த அந்தஸ்தை, கடன் கொடுத்தவர் ஏற்பது. இது எளிதில் வசூலாகாது. நாள்பட்டு வளரும். வரும்பொழுது சிக்கலாகும்.
- ✡ பணம் நம்மை நோக்கிவர (நம் பணமானாலும்) நமக்கு அதிக வலிமை இருக்கவேண்டும்.
- ✡ வயது, பதவி, செல்வம், அந்தஸ்து, படிப்பு, ஜாதி, செல்வாக்கு காரணமாக, கடன் பெற்றவர் உயர்ந்தவரானால், அவர் உயர்வுஎன கொடுத்தவர் ஏற்றால், அப்பணம் வருவது சிரமம்.
- ✡ இந்த உண்மை கொடுத்தவருக்குத் தெரியாது.
- ✡ தெரிந்தால் எப்படி நிலைமையை மாற்றமுடியும்? "அப்படியானால் என் பணம் வாராது" என முடிவு செய்வார்.
- ✡ இந்த உண்மை மின்னலாக அவர் மனத்தைத் தொட்டால், அதை அவர் மனம் ஏற்றால், அந்த நேரம் கடன்பெற்றவர்நிலை சற்று பலஹீனமடையும்.
- ✡ அதன் வழி கடன் கொடுத்தவர் அந்த எண்ணத்தை - அவர் உயர்ந்தவர்என்ற எண்ணத்தை - தன் மனத்திலிருந்து விலக்கினால், விடுதலைபெற வழி விடும்.
- ✡ அன்னையை *அதன் பிறகு* அழைத்தால் பணம் திரும்ப வரும்.
- ✡ இதை விலக்காமல் அன்னையை அழைத்தால் பல விஷயங்கள் நகரும், பணம் வாராது.

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

நாம் ஏற்கனவே செய்ததை இன்று வேறொருவர் செய்யும் பொழுது அதிக கோபம் வருவது அகந்தை தீவிரமாகச் செயல்படுவதைக் குறிக்கும்.

***பிறரில் நாம் காணும் நம் குறை அகந்தைக்கு விருந்து.***





## P.98 In a mystical barrage of dynamic light

### செயலெனும் ஒளி புதிரான தடை

- ✡ **பெரிய, உயர்ந்த, வளைவான உலகமெனும் குன்றைக் கண்டான்,**
- ✡ **மலையேறும் தெய்வரதமாக நிமிர்ந்து நின்றது.**
- ✡ **விளங்காத வானம் அசைவின்றி அமைந்தது.**
- ✡ **ஜடமெனும் மாளிகையின் விளிம்பில் ஒளிந்துள்ள பீடம்,**
- ✡ **கண் மறைவான சிகரம், கடலென விரியும் உலகச் சிற்பம்,**
- ✡ **நுரைத்தெழும் கடலலை புருஷனை நோக்கி உயர்ந்தது,**
- ✡ **அளவிலா பரப்பில் அசைந்தெழுந்து உயர்ந்தன,**
- ✡ **விவரிக்கவொண்ணாத ராஜ்யத்தை நோக்கித் துள்ளி எழுந்தது,**
- ✡ **அறிய முடியாத அனந்த பிரம்மத்தை நூறு படிகளால் கடந்தது,**
- ✡ **பிடிபடாத உச்சியைக் கோபுரமாகத் தாண்டியது,**
- ✡ **பிரம்மாண்டமான மூச்சற்ற பரப்பில் நுழைந்து, மறைந்தது.**
- ✡ **கோயில் கோபுரம் படிப்படியாக ஏறும் சுவர்க்கம்,**
- ✡ **பக்தியால் எழும் ஆத்மாவின் சிற்பம்,**
- ✡ **காண முடியாததைக் காண விழையும் கனவு.**
- ✡ **அனந்தம் அழைக்கிறது; ஆத்ம எழுச்சி கனவிலாழ்கிறது,**
- ✡ **உலகமெனும் மலையுச்சியை உயரும் கட்டடம் தொடும்.**
- ✡ **விவரமான சிருஷ்டி ஆனந்தம் தரும்.**
- ✡ **குரலழிந்த அமைதியின் பெருமையுள் கிளர்தெழுந்தது,**
- ✡ **திரைமறைவிலுள்ள காலமழியும் புதிரை புவனம் மணந்தது.**
- ✡ **ஏகன் ஏற்கும் ஏகப்பட்ட முறைகள்,**
- ✡ **மூலத்தையடையும் முறையைக் காட்டும்.**

**✡ இயற்கையின் ஆழத்துள் நெடுநாளாய் இழந்த பிரம்மம்,**
**✡ பூமியில் முளைத்து அனைத்துலகையும் அணைத்துப் பிடித்தது.**
**✡ பெரியதின் சிறிய சுருக்கம்,**
**✡ ஜீவனின் இலட்சியத்திற்கு இதுவே ஒரே படிக்கட்டு.**
**✡ ஆத்மாவின் அளவுகட்குரிய சுருக்கம்,**
**✡ பிரபஞ்ச நிர்வாகத்தின் பிழையற்ற பிரதி,**
**✡ ஆத்ம சூழலில் ஏற்பட்ட இரகஸ்ய மறுபதிப்பு.**
**✡ பிரபஞ்சத்தின் சூட்சும அமைப்பு,**
**✡ உள்ளேயும், மேலேயும், ஆழத்திலும், மேலும் உள்ளது.**
**✡ இயற்கையின் தெளிவு புலப்படும் செயல்,**
**✡ மண்ணெனும் ஜடத்தின் மந்தமான உறக்கம் கலைகிறது.**
**✡ சிந்தித்து, உணர்ந்து, குதூகலித்து,**
**✡ தெய்வத்தை நம்முள் சிறப்பாக அமைத்து,**
**✡ மனித மனத்தை விசாலமான சூழலுக்கு உயர்த்திற்று.**

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

நேற்றிருந்த நிலையை மறந்து, இன்றுள்ள நிலையைப் பாராட்டுவது சமூகம். புதுப்பணக்காரனும், ஓய்வு பெற்ற ஆபீசரும் இதை உயர்வாகவும், தாழ்வாகவும் பெறுகிறார்கள். பிறர் மட்டுமல்லர், நாமும் நம்மை அது போல் நினைக்கிறோம். அதேபோல் மனிதன் தன்னை மனிதனாகக் கருதாமல் ஆன்மாவாகக் கருதவேண்டும்.

***உள்ளதற்கே உயர்வுஎன்பதால்***
***மனிதனை ஆன்மாவாக அறிவோம்.***



# அன்னையே வரமொன்று கேட்கிறேன்

R. மகேஸ்வரி

அன்னையே வரமொன்று கேட்கிறேன்
இப் புதுவருடத்தில்.
ஆண்டுதோறும் புதுவருடம் புதிதாய்ப் பிறக்கின்றது
வயதொன்று ஏறுகிறது.
இந்த உடலுக்குரிய வயது தெரிகின்றது.
**என் ஆன்மாவின் வயதென்ன என்றறியும்**
**ஞானத்தை வரமாகக் கேட்கின்றேன்**
**இப் புதுவருடத்தில்.**

நான் யார்?
இந்தப் பிறப்பின் அர்த்தமென்ன?
எதற்காக இங்கு வந்திருக்கிறேன்?
இதில் என்னுடைய தனித்துவம் என்ன?
**இக்கேள்விகளுக்கெல்லாம் விடையறியும்**
**ஞானத்தை வரமாகக் கேட்கின்றேன்**
**இப் புதுவருடத்தில்.**

நான் யாரென்று பல்லாயிரம் முறை கேட்டபிறகு
நானொரு ஆன்மாஎன்று விடை தந்தாய்.
படிப்பதற்குரிய அறிவைக் கொடுத்தாய்.
ஆன்மாவின் வகையறியச் செய்தாய்.
ஒவ்வொரு நாளும் ஒவ்வோர் ஆன்மநிலையில் இருக்கின்றேன்.
ஒரே நாளிலே ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு மாறுகின்றேன்.
**என் ஆன்மாவின் உண்மைநிலையைக் காணும்**
**ஞான திருஷ்டியை வரமாகக் கேட்கின்றேன்**
**இப் புதுவருடத்தில்.**

**கைக்குழந்தை ஆன்மா**விலே நின்று
உலகத்தில் நடக்கும் கொடூரங்களை,
வன்முறைத் தாக்குதலை,
இயற்கையின் சீற்றங்களை, கொடுமைகளை,
ஈவிரக்கமற்ற முறையில் நடக்கும் அனைத்து
அனுபவங்களையும் உன்னுள்
பதிவுகளாக்கிக் கொள்கிறாய் என்கிறாய்.

**குழந்தை ஆன்மா**வென்று வந்தவுடனேயே,
இதைச் செய், அதைச்செய்என்று
ஆயிரமாயிரம் விதிகளையும் கட்டுப்பாடுகளையும்
வகுத்துக் கொண்டு அதை சந்தோஷமாகவோ,
கசப்பாகவோ ஏற்று அனுபவிப்பது ஒன்றுதான்
எனக்குரியது என்கிறாய்.

**இளம் ஆன்மா**வில் மனிதமாக நின்று,
உணர்வின் சந்தோஷங்களை அளவுகடந்து
அனுபவிக்கிறாய். பணம், புகழ், செல்வாக்கு,
வசதியென உடலின் உணர்வுகளெல்லாம்
அபரிமிதமாகப் பூரிக்கும் அனுபவத்தையும்,
பசிக்கு ஒரு பிடி உணவும் கிடைக்காத பிச்சைக்காரனாய்,
குளிரென்றும், மழையென்றும், புயலென்றும்,
ஒண்ட வழியில்லாமல், ஆதரவின்றி, அவமானப்பட்டு,
கதறித் தவிக்கும் வாழ்வின் அனுபவத்தையும்
சேகரித்துக் கொள்கிறாய் என்கிறாய்.

**முதிர்ந்த ஆன்மா**என்ற நிலையில்,
அன்புதான் பிரதானம்,
கொள்கைதான் முக்கியம்,
பண்புதான் உயர்வு,
சகோதரத்துவம், சமத்துவம்,
எல்லோருக்கும் எல்லாமும்,



சேர்ந்து வாழவேண்டும்,
கூடி வாழ்ந்து உயரவேண்டும்,
உறவென்றால் உயிரும் கொடுக்கவேண்டும்
என்கிற மனித உறவுகளுக்கு உயிர்கொடுக்கும்
அனுபவங்களை யெல்லாம் ஒவ்வொரு பிறவியாய்
பிறந்து அனுபவிக்கிறாய் என்கிறாய்.

**வயதான ஆன்ம** நிலைக்கு வந்தபின்
***எல்லோரும் என்னுள்ளே***
***என்னுள்ளே எல்லோரும்***
என்ற ஞானத்தை உணர்ந்து கொள்கிறாய்.
நீ யார்என்பதை அறிகிறாய்.
பார்வை அகன்று விரிந்து
புறவாழ்வின் பின்னே அதனுள்ளே மறைந்துள்ள
அகவாழ்வொன்று இருக்கின்றதுஎன்பதை
திருஷ்டியால் பார்க்கிறாய்.
உள்ளே ஆழத்திற்குள் வெகு ஆழத்திற்குள்
போக வேண்டும்என்ற விருப்பம் கொள்கிறாய்.
உன் வாழ்வின் இலட்சியமே உன்னை அறிவது
என்பதில் மட்டுமே ஆர்வம் கொள்கிறாய் என்கிறாய்.

300 முதல் 600 மனித உடலில் பிறப்பெடுத்து
ஒவ்வோர் அனுபவமாக நிதானமாக சமநிலையுடன்
அனுபவித்து அனுபவங்களின் சாரங்களின் தொகுப்பாக நின்று
எல்லோரும் தான் பெற்றதைப் பெற வேண்டும்என்ற
தீவிரமான ஆசையின் அனுபவத்தை அனுபவிக்க
அடுத்த **உயர்நிலை ஆன்மா**வாக உடலில் சேர்கின்றது என்கிறாய்.

புத்தர், கிருஷ்ணன், ஏசு, முகம்மது நபி போன்ற
இறைதூதர்களாக, இறை வடிவங்களாக
மனித உடலில் புகுந்து வழிகாட்டியாக நின்று
**தெய்வநிலைஆன்மா** அனுபவத்தைச் சேகரம் செய்கிறது என்கிறாய்.

அனுபவங்களை அனுபவிப்பதற்காக ஆன்மா பிறப்பெடுத்திருக்கின்றது என்றாய்.

**இந்தப் பிறவியில் என் ஆன்மா எந்த அனுபவத்தை அனுபவிக்கிறது என்பதை அறியும் திருஷ்டியை வரமாகக் கேட்கிறேன் இப்புது வருடத்தில்.**

ஆனந்தம்தான் இவ்வுலகம் முழுவதும் பரந்து விரிந்து இருக்கிறது என்றாய்.
வலியும் சந்தோஷமும், கசப்பும் இனிப்பும், நல்லதும் கெட்டதும், பாவமும் புண்ணியமுமென ஏன் இந்த இரட்டை வேடம்?
ஆன்மாவிற்கு அல்ல இந்த இரட்டை வேடம், மனத்திற்குத்தான் என்கிறாய்.
ஒத்துக் கொள்கிறேன்.
ஆன்மாவிற்கு எல்லாமும் அனுபவம்தான் என்கிறாய்.
ஒத்துக் கொள்கிறேன். அப்படியென்றால்,
அந்த ஆன்மாவை எனக்குக் காட்டு.
என்னின் ஒவ்வோர் அணுவிலும் ஒளிந்து கொண்டிருக்கிறது என்றாய்.
இந்தக் கண்ணாமூச்சி ஆட்டத்தைத் தொடராமல்,
**என் ஆன்மாவை எனக்குக் காட்டு எனும்**
**வரத்தைக் கேட்கிறேன் இப் புதுவருடத்தில்.**

வலியென்ற ஒன்றில்லை என்றாய்.
நீ சொன்னதை அப்படியே ஏற்றேன்.
கால் அடிபட்டது வலியென்று உணர்வு கூறியது.
மனம் தாங்க முடியாத வலியென்றது.
இதற்கு மேலிருந்து பார், உண்மை புரியும் என்றாய்.
ஜீவியத்திலிருந்து பார்த்தேன்.
உடனே மனம் தன் நாடகத்தை நடத்த இயலாமல் தவித்தது.
அடிபட்ட இடத்தில் வலியில்லை.
உடலென்ற நிலையில் நின்று பார்த்தால் மட்டுமே மனம்
தன் நாடகத்தை நடத்த முடியும்என்ற தெளிவு பிறந்தது.



வலியின் மறு பக்கத்தைப் பார், ஆனந்தம் தெரியுமென்றாய்.
மேலிருந்து பார்த்தால் வலி நிற்கிறது,
அடுத்த பக்கத்தைப் பார்க்க என்ன செய்வதென்று கேட்டேன்.
விசாரணைசெய் என்றாய்.
அடிபட்டது யார்? கால், அதாவது உடல்.
வலியென்று உணர்ந்தது யார்? உணர்வு.
வலிக்க வேண்டும்என்று கட்டளையிட்டது யார்? மனம்.
மேலிருந்து பார்த்தது யார்? ஜீவியம்.
இந்த நேரத்தில் வலிஎன்ற அனுபவத்தை பார்த்துக் கொண்டிருப்பது யார்? ஆன்மா.
அடிபட்ட இடத்திலுள்ள ஆன்மா இதையோர் அனுபவமாகப் பார்த்து கொண்டிருக்கிறதுஎன்ற ஞானத் தெளிவுடன் பார்த்தால், ஒரு க்ஷணம் வலியின் அடுத்த பக்கமான ஆனந்தம் மின்னலாக தெறித்து, மறைந்தது.

ஆனாலும் அடுத்த முறை வலி வலியாகத்தான் தெரிந்தது.
இது ஏனென்று கேட்டேன்.
நீ செல்ல விரும்புவது ஒற்றையடிப் பாதை.
நாங்கள் செல்வதோ ராஜ பாதை.
எல்லோரையும் போல நீயும் வலியை வலியாக,
சந்தோஷத்தை சந்தோஷமாக,
வேதனையை வேதனையாக,
துக்கத்தைத் துக்கமாக,
ஏற்று வாழாமல் புது பாதையை உருவாக்காதே!
என்று மனம் எங்கிருந்தோ மெதுவாகக் குரலெழுப்பியவுடன்
உணர்வு அதை வெகுவேகமாக ஆமோதித்த உடன்
உடல் வீண் வேலைஎன்று சொல்லி
வலியை மீண்டும் அனுபவிக்க ஆரம்பித்தது.
இதுதான் வாழ்க்கை.
உயர நினைத்தால் உன்னைக் கீழே இறக்கச் செய்வதுதான்
எங்களின் வேலை. எங்களை எங்கள் போக்கிலே விடுஎன்றன புலன்கள்.

**இதை மறுத்து வாழ்வதற்குரிய உறுதியை,**
**ஞானத் தெளிவை வரமாக வேண்டுகிறேன்**
**இப் புதுவருடத்தில்.**

ஆன்மா மட்டும் அனுபவிக்கும் ஆனந்த அனுபவத்தை
இந்த மனம், உணர்வு, உடலும் சேர்ந்து அனுபவிப்பதைப் பார்க்கும்
**ஞானப் பார்வையை வரமாகக் கேட்கின்றேன்**
**இப் புதுவருடத்தில்.**

ஒவ்வொரு செயலும் அனுபவத்தைக் கொடுக்கின்றது.
அந்த அனுபவத்தை ஆன்மா பதிவு செய்து கொண்டேயிருக்கிறது.
அதனுடைய வேலை பதிவு செய்வது மட்டுமே.
எந்தவோர் அனுபவத்திலும் சேராமல், கலக்காமல், பார்ப்பதால்,
பதிவு செய்வதால் என்றென்றும் ஆனந்தத்தில் மிதந்து
கொண்டிருக்கிறது.
ஆனந்தத்தின் உச்சகட்டத்தை உணர்ந்து அனுபவித்துக்
கொண்டிருக்கிறது.
அதுதான் ஆன்மாவின் இயற்கை.
செயலுடன் கலக்கும்பொழுதுதான் எதிர்பார்ப்பு, வேதனை, சந்தோஷம்,
புகழ்.
விலகி நின்று பார்த்தால் விரக்தி வருவதில்லை,
அனுபவம்என்ற ஞானம் பிறக்கின்றது.
மனம் இந்த நாடகத்தில் எப்பொழுதும் பிறருடன் கலந்து பார்க்கத்தான்
விரும்புகிறது.
ஆயிரமாயிரம் எண்ணங்கள் ஒரு நாளில் மனதில் உலவுகின்றது.

அதில் எதுவொன்றும் அதற்குச் சொந்தமில்லை.
அதற்கும் அது தெரியும்.
அதனால் அது ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு
தாவிக் கொண்டே இருக்கிறது.
சூழலில் இருப்பதைத் தனக்கென, தன்னுரிமையென சொந்தம்
கொண்டாடுகிறது.



உணர்ச்சியைத் தனக்குத் துணை செய்ய உதவிக்குக் கூப்பிடுகிறது.
உடல் தனித்திராமல் தானும் சேர்ந்து கொள்கிறது.
எந்தவொன்றுடனும் கலக்காமல் **ஆன்மாவின் அனுபவத்தை**
**அனுபவமாகக் காணும் ஞானத்தை வரமாகக் கேட்கிறேன்**
**இப் புதுவருடத்தில்.**

பழக்கத்தில் தன்னை மறந்து இறந்துபோன செயலிலும்
உயிர் இருக்கின்றதுஎன்பதை உணரச் செய்தாய்.
ஒவ்வொரு நாளிலும் புதுப் புது அர்த்தத்தைக் காட்டினாய்.
குளிப்பதில் ஆனந்த அனுபவத்தை இரண்டாம் மனிதமாய்
நின்று காணச் செய்தாய்!
**இந்த ஆனந்த அனுபவத்தைச் சிறிது சிறிதாக நாள் முழுவதும்**
**அனுபவிக்கும் சக்தியின் திறனை வரமாகக் கேட்கிறேன்**
**இப் புதுவருடத்தில்.**

எது நடந்தாலும் அது நல்லதற்கே!
எந்த அனுபவமாக இருந்தாலும் அது ஒன்றைப் புதியதாகக் கற்றுக்
கொள்வதற்கே!
நடந்து கொண்டிருப்பவையெல்லாம் மாறிக் கொண்டேயிருக்கும்
கனவுகளே!
அனுபவித்துக் கொண்டிருப்பவையெல்லாம் மாறிக் கொண்டேயிருக்கும்
கனவுகளே!
இந்த உண்மையை ஒரு செயலில் உணரச் செய்யும் அனுபவத்தையும்
தந்தாய்.
**என்றென்றும் இந்த நினைவில் வாழும்**
**வாழ்வு நிலையை வரமாகக் கேட்கிறேன்**
**இப் புதுவருடத்தில்.**

**என்னை அறியும் ஞானத்தை வரமாக கேட்கிறேன்.**
**என்னைப் பார்க்கும் ஞானத்திருஷ்டியை வரமாகக் கேட்கிறேன்.**
**என் ஜீவியத்தை உணர்ந்து அனுபவிக்கும் பாக்கியத்தை வரமாகக்**
**கேட்கிறேன்.**

**என்னை அறிவதால், பெறும் அனுபவங்களை சம நிலையில் அனுபவித்து உயர்நிலை ஆன்மாவாக உயர வரம் கேட்கிறேன்.**

**கேட்பவற்றையெல்லாம் தருவதை வரமாகப் பெற்று**
**இப்பூவுலகத்திற்கு நீ வந்தாய்!**
**உன்னை அறியும் பாக்கியத்தை இந்தப் பிறவியில் எனக்களித்தாய்!**
**பரநலத்தைக் கருதும் ஞான குருவின் தெளிவுரைகளையும் காட்டினாய்.**
**உன்னுடைய ஆட்சியில் நானொரு துரும்பு, தூசியும்கூட.**
**இவையெல்லாம் கேட்க வேண்டும், கேட்க முடியும்என்ற**
**தெளிவைத் தந்த அன்னையே!**
**என் நமஸ்காரத்தையும் நன்றியையும்**
**இப் புதுவருட நன்னாளிலே**
**உந்தன் திருவடிகளில் சமர்ப்பிக்கிறேன்.**
**வேண்டும் வரம் தந்தருள்வாய்!**

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

யோகியாவதும், கிருகஸ்தனாவதும் பலராலும் முடியக்கூடியதாகும். குடும்ப வாழ்விலிருந்துகொண்டு, யோகம் செய்வது சிரமம். யோகி, ஞானத்தை மனத்தின் மூலம் தேடுகிறான் அல்லது இதயத்தின் மூலம் பக்தியைத் தேடுகிறான். குடும்பஸ்தன் ஆசையின் பிடியில் வாழ்கிறான். இவற்றைச் சேர்ப்பதற்கு, வாழ்வு மையம் மனத்தையும், பிராணனையும் விட்டகன்று, சைத்திய புருஷனை வந்தடைய வேண்டும்.

***யோகத்தையும் வாழ்வையும் பூரணயோகம்***
***சைத்திய புருஷனில் இணைக்கிறது.***



# யோக வாழ்க்கை விளக்கம் V

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**948) (Physical organisation) வாழ்வின் அமைப்பு மனிதனுடைய மையம். மௌனமான ஆழ்மனத்தின் செயல் உயிரைக் காப்பாற்றக்கூடியது அல்லது வாழ்வுள்ள நிலையில் அனுபவிப்பது. கலையுணர்வும், அறிவின் ஆராய்ச்சியும்கூட அதனால் ஒதுக்கப்படுகிறது. தன் போக்கை (occupation) அனுபவிக்க மனிதன் ஒதுக்கிய செயல்கள் திடீரென முளைத்து குறுக்கிட்டு அவனுடைய முக்கிய வேலையில் எழும். அதுவும் அவ்வேலை அவனுக்குப் பிடிக்காத நேரத்தில் எழும். இதுபோல் பேரிலக்கியம் எழுவதுண்டு.**

***விரும்பி ஒதுக்கும் சக்தி திரும்பி வந்து பேரிலக்கியம் எழுதியதுண்டு.***

- ✡ மனிதன் ஒரு வகையாகப் பார்த்தால் வளர்ந்த குழந்தை.
- ✡ பொதுவாகப் பணம் வந்தால் தன் கட்டுப்பாடு விலகி, குழந்தை மனப்பான்மை வெளிப்படும்.
- ✡ அப்படி முதலில் மனிதன்செய்தது பல மனைவிகளை மணந்தது.
- ✡ அந்தப்புரமில்லாத அரசனில்லை.
- ✡ முடியும் என்றால் செய்பவன் மனிதத் தன்மையில்லாத மனிதன்.
- ✡ பணம், பதவி வந்தபின் மனிதத்தன்மை இருப்பது குறைவு. சுயநலம் மிஞ்சும்.
- ✡ சுயநலமும் குழந்தைத்தனமாக இருக்கும்.
- ✡ அர்த்தமற்ற காரியத்தை அளவுகடந்துசெய்ய ஆர்வம் அதிகமாக இருக்கும்.
- ✡ எந்த மனிதனையும் அந்தநிலையில் கட்டுப்படுத்த முடியாது.
- ✡ ஊர் கண்டிக்கும்என்றால் கட்டுப்படுவான். இல்லையேல், இல்லை.

- ✡ சுதந்திரம் உள்ள மனிதன் தன் வாழ்வை அவலமாக்குவதில் அவனுக்கு நிகர் அவனே.
- ✡ எல்லா மனிதர்களும் பிரம்மம்.
- ✡ எல்லா மனிதர்களிடமும் அனந்தமான அற்புதமான திறமை, குணமிருக்கும்.
- ✡ அர்த்தமற்ற வேகம் அதையறியாது, வெளிவர அனுமதிக்காது.
- ✡ காளிதாஸனாக வேண்டியவனுக்கும் நுனி மரத்தில் உட்கார்ந்து அடி மரத்தை வெட்டும் ஆர்வம் மேலெழும், செயல்படும்.
- ✡ மனிதனுடைய போக்கை வாழ்வு பெரும்பாலும் அனுமதிக்கும்.
- ✡ அவன் போக்கைமீறி வாழ்வு சிறுஅளவில் செயல்படுவது உண்டு, பேரளவில் செயல்படுவதுண்டு.
- ✡ பேரளவில் செயல்பட்டால் காளிதாசன் பிறப்பான்.
- ✡ சிறுஅளவில் செயல்பட்டால் சர்க்கரை மிட்டாய் சாப்பிட ஆசைப்படும் ஹைகோர்ட் வக்கீலாவான்.
- ✡ பெர்னார்ட் ஷா கதையில் புரொபசர் ஹிக்கின்ஸ், கர்னல் பிக்கரிங்கும் சேர்ந்து ஓர் அழகான, அழுக்கான ஏழைப் பெண்ணை (Duchess) பிரபு வீட்டுப் பெண்போலப் பேச வைக்கின்றனர்.

*புரொபசருடைய திறமை மலை போன்றது.*
*கர்னலுடைய பழக்கம் உயர்ந்த பண்பாலானது.*
*இருவரும் பக்குவம், நிதானமற்ற இளம் பிள்ளைகள்.*

- ✡ நம் நாட்டில் இதுபோன்று (immature) நிதானமற்று இளைஞர்களும் இருக்கமாட்டார்கள்.

மேல் நாட்டில் மனிதனுக்கு அறிவு வளர்ந்துள்ளது, ஆன்மா இருண்டது.

மனிதன் தன் அறிவைப் பாராட்டுவான், ஆத்மாவை அறிவது இல்லை.

70 வயது அமெரிக்கர்கட்கும் நம் நாட்டில் 10 வயது சிறுவனின் நிதானமிருக்காது.



10 வயது அமெரிக்கச் சிறுவனுக்கும் 70 வயது படித்த இந்தியர் அறிவு உண்டு.

- ✡ நிதானமற்ற மனிதனுக்கும் பெருந்திறன் உண்டு.

வாழ்வு அதை வெளிக்கொணர முயன்றால், அவனுக்கு அது பிடிக்காது.

முயன்று தீவிரமாக எதிர்ப்பான்.

சில சமயம் வாழ்வு ஜெயிக்கும்.

அப்படி எழுந்த மேதை காளிதாசன்.

இது எல்லா நிலைகளிலும் உண்டு.

கண்ணுக்குத் தெரிவது சிறியது.

பெரியது கண்ணுக்குத் தெரியாது.

பெரியதை ஒருவன் பாராட்ட முயன்றால் வீடும் ஊரும் உலகமும் எதிர்க்கும்.

அந்த எதிர்ப்பு இல்லாவிட்டால், அவனே எதிரியாவான்.

1000 பெரிய மனிதர் வாழ்வைச் சோதனை செய்தால், 500 பேர் வேண்டாவெறுப்பாக ஏற்ற வாழ்வே அவர்களை உச்சிக்குக் கொண்டு வந்திருக்கும்.

தண்டோரா போட்ட காமராஜ் தலைவரானது அவ்வழியே.

விஷமியான கிளைவ் சாம்ராஜ்யம் ஸ்தாபித்ததும் அப்படியே.

போக்கிரியான சர்ச்சில் உலகப் பெருந்தலைவரானதும் அவ்விதமே.

❀ ❀ ❀

**949) செயல் பல நிலைகளிலுண்டு. அங்கு திறமை பூரணமானால் செயல் பூர்த்தியாகும். திறனான வாழ்வின் அமைப்பு (physical organisation), சக்தியாலான உணர்வின் அமைப்பு (vital organisation), எண்ணத்தாலான மனத்தின் அமைப்பு (mental organisation), ஆன்மீகக் கருத்து (Real-Idea) சத்தியஜீவிய அமைப்பு போன்றதாகும்.**

*செயல் தன்னைப் பல நிலைகளில் பூர்த்தி செய்து கொள்ளும்.*

✡ சக்தி திறமையாகி, செயல் பூர்த்தியாகிறது.
சக்திக்கு வேகம் உண்டு.
மரம் வெட்டுவது ஒரு செயல்.
சக்தி வேகமாகத் தாக்கும்.
பல காரியங்கள் சேர்ந்து மரம் வெட்டி முடிக்கப்பட வேண்டும்.
அதற்குத் தாக்கும் சக்தி போதாது.
சக்தியைப் பயன்படுத்தும் அறிவு தேவை.
தாக்கும் சக்தி வெட்டும்.
வெட்டியபின் விழுவது ஆபத்து விளைவிக்காமலிருக்க முன் யோசனை வேண்டும்.
பல பக்கங்களிலும் தாங்கிப் பிடிக்க வேண்டும்.
அறிவு செயல்பட்டு, திறமையாகி, சக்தியைப் பயன்படுத்தி, மரத்தை வெட்டி முடிக்க வேண்டும்.

✡ மேற்சொன்னது எளிய செயல்.
சம்பந்தப்பட்டது, மரம்.
பிரச்சினை, அதன் எடை.
திறமை, அது பாதிக்காமல் பாதுகாப்பது.
10 பேரைச் சேர்த்து ஒரு முடிவு எடுப்பது அடுத்த நிலைச் செயல்.
இங்கு, தேவைப்படும் திறமை வேறுபட்டது.
பலருடனும் இனிக்கப் பழகும் திறமை வேண்டும்.
மரம் விழும்பொழுது காயம் படாமலிருப்பது எளியது.
10 பேரில் சிலர் கோபப்பட்டால் காரியம் கெடும்.
எவர் கோபமும் எழாமல், அவனைவரிடமும் பழகும் திறமை இங்கு அவசியம்.
மேலும் அப்பத்து பேரும் சம்மதப்பட்டு காரியத்தைச் செய்யும்படி பழகுவது பெரிய திறமை.
அது உணர்வின் அமைப்பு.

✡ வாழை பயிரிட்டால் இலட்ச ரூபாய் சம்பாதிக்கலாம்.
வாழை பயிரிட்டவர் அதைக் காற்றுக்குப் பலி கொடுத்தனர்.



அது ரிஸ்க்.
ரிஸ்க்கில்லாமல் பலன் பெறுவது உடலுழைப்பாலோ, இனிய பழக்கத்தாலோ வாராது.
அதற்கு அறிவு வேண்டும்.
அறிவு என்பது ரிஸ்க் தரும் காற்றும், பலன் தரும் குலையும் இணையுமிடம்.
காற்று மழைக் காலத்தில் அடிக்கிறது.
வாழை 12 மாதப் பயிர்.
மழைக் காலத்தில் நட்டால் வாழை நன்கு வளரும்.
மழைக் காலத்தில் நட்டால், 12 மாதம் கழித்து காற்றடிக்கும் மாதத்தில் குலை தள்ளும்.
காற்றைக் குலை விலக்க முடியுமா?
ஆடி மாதம் குலை தள்ளும்படி வாழையை நட்டால், காற்று வந்தாலும் இளம் வாழை பாதிக்கப்படாது.
இது அறிவின் செயல்.
காற்றால் குலை பாதிக்கப்படும்.
விலையும் நம்மைப் பாதிக்கும்.
கரண்டும் பாதிக்கும்.
தண்ணீர் சப்ளையும் செலவை பாதிக்கும்.
இத்தனையையும் கலந்து இலாபகரமாகப் பயிரிட அறிவு அமைப்பாக இருக்க வேண்டும்.
இது mental organisation அறிவின் அமைப்பு.

✡ எளிய அமைப்பு சிறுபலன் தரும்.
உணர்வின் அமைப்பு அதிகப் பலன் தரும்.
அறிவின் அமைப்பு அபரிமிதமான பலன் தரும்.
வாழை பயிரிடுவதைவிட வியாபாரத்தில் அறிவின் அமைப்பு அமோகப் பலன் தரும்.
அரசியலில் பலன் மேலும் அதிகம்.
அறிவால் சாதிப்பதை உணர்வாலும் சாதிக்கலாம், திறமையாலும் சாதிக்கலாம்.
செயலுக்கும், உணர்வுக்கும், அறிவுக்கும் சூட்சுமம் உண்டு.
சூட்சுமம் இவற்றையெல்லாம்விட அதிகமாகச் சாதிக்கும்.

விற்காத சரக்கை இனிமையான பழக்கம்என்ற சூட்சுமம் வியாபாரத்தில் பலன் தரும்.

இந்த சந்தர்ப்பத்தில் எந்தத் திறமை சாதிக்கும்என அறிவது முடிவான சூட்சுமம்.

ஸ்டாக் மார்க்கட்டில் எந்தஷேர் விலை ஏறுகிறதோ, அதை அனைவரும் வாங்குவார்கள்.

பெரும்பாலும் இலாபம் வரும், சில சமயம் நஷ்டம் வரும்.

வாரன் பப்பட் என்பவர் ஷேர் விலையை புறக்கணித்து, கம்பனி மதிப்பைக் கண்டு ஷேர் வாங்கினார்.

50 வருஷமாக அவருக்கு இலாபம் மட்டும் வந்தது, நஷ்டம் வரவேயில்லை.

இன்று உலகில் முதன்மையான பணக்காரர் அவர்.

தொழிலில் நஷ்டம் வாராத சூட்சுமத்தை அவர் கண்டு கொண்டார்.

❀ ❀ ❀

**950) ஒரு நிலையில் அமைப்புச் செறிவடைந்தால், அடுத்த நிலைக்குப் போகும்.**

***நிலை செறிந்து, மாறும்.***

ஒரு கடை அதிக வியாபாரமானால், முதலாளி பல கடைகள் ஆரம்பிப்பார். பொதுவாக அவை வெற்றிபெறும். ஏதோ ஒரு சமயம் புதுக் கடைகளை மூட வேண்டியிருக்கும்.

- ✡ முதற்கடை நிர்வாகம் சிறப்பாகச் செறிவடைந்து, நிறைந்து வழிந்தால், புதிய கடைகள் வெற்றிபெறும்.
- ✡ முதற்கடை வெற்றியானாலும், நிர்வாகம் செறிவடையவில்லை (not saturated) எனில், புதிய கடைகள் வெற்றிபெறாது.

தமிழ்நாட்டுப் பண்புப்படி பிறந்தபெண் கண் கசங்கக்கூடாது. அது குடும்பத்தைப் பாதிக்கும். மேற்சொன்ன இரு உதாரணங்களிலும் சட்டம் ஒன்றே. மூன்று பெண்களுள்ள குடும்பத்தில் முதற்பெண்ணை சம்பாதிக்கத் திறமையற்ற, படிக்காதவருக்குக் கொடுத்தனர். 9 வருஷம் கழித்து இரண்டாம் பெண்ணுக்கு பட்டதாரி மாப்பிள்ளை தேடினர்.



எல்லா வசதிகளுமிருந்தும் பட்டதாரி வரன் கிடைக்கவில்லை. முதல் நிலை செறிவாகாமல் அடுத்த நிலை பலிக்காது. பிடிவாதமாக பட்டதாரியைத் தேடியதில் 4 வருஷம் கழித்து மட்டமான குடும்பத்தில், திராணியற்ற, திறமையற்ற, வேலையில்லாத பட்டதாரி அமைந்தது. திருமணம் கோர்ட்டிற்குப் போயிற்று. பிரம்மப் பிரயத்தனப்பட்டு நிலைமை 3 ஆண்டுகளுக்குப்பின் சீர்குலைந்து, ஒரு நிலைக்கு வந்தது. அடுத்த பெண்ணுக்கு அடுத்த 3 ஆண்டு போராட்டம். பட்டம் பெறாத வரன் அமைதியாக, அழகாக, சிறப்பாக அமைந்தது.

- ✡ விவசாயம் முதல் நிலை, தொழில் (industry) அடுத்த நிலை. மேற்கூறிய சட்டம் தொழிற்புரட்சியில் செயல்பட்டதை எடுத்துக் கூறியவர் நோபல் பரிசு பெற்றார்.
- ✡ அரசியல், குடும்பம், வியாபாரம், மார்க்கட், கல்வி ஆகிய அனைத்துத் துறைகட்கும் உள்ள சட்டம் இது.
- ✡ ஆயுதம் தாங்கிப் போரிடாமல் இந்தியா சுதந்திரம் பெற்றது. அது உலக அதிசயம். சுமார் 1000 ஆண்டுகளாக இந்தியா பல நூறு சிறு இராஜ்யங்களாகச் செயல்பட்டது. வர்ணாசிரம தர்மம் முதற்சட்டம். முஸ்லீம் படையெடுப்பு 500 அல்லது 600 ஆண்டுகட்குமுன் எழுந்தது. நம் நாட்டில் ஜாதிகள் ஆயிரம், உயர்வு, தாழ்வு, தீண்டாமையுண்டு. முஸ்லீம்கட்குச் சம உரிமையுண்டு. நம் நாட்டைப் பிடித்தனர். மதம் மாற்றினர். கட்டாயமாக மதம் மாற்றினர். இந்தியாவில் தீண்டாதவர் விரும்பி முஸ்லீம் மதத்தைத் தழுவினர். அது அவர்களுள் 1/3 பங்கு. 1947இல் ஆங்கிலேயன் 150 ஆண்டுகட்குப்பின் தானே விலகச் சம்மதித்தான். நாடு பிளவுபட்டது. ஆங்கிலேயன் இரண்டாவதாக வந்தான். முதலில் போனான். அவன் நம் நாட்டுக் கலாச்சாரத்தில் தலையிடவில்லை. முஸ்லீம்கள் முதலில் வந்தனர். அவர்களுள் 1/3 பாகம் இந்தியர்கள். தீண்டாமையால் மதம் மாறியவர்கள். தீண்டாமை பாகிஸ்தானை ஏற்படுத்தியது. தீண்டாமை ஒழிந்தால் பாகிஸ்தான் இந்தியாவுடன் சேரும்.

***முன்னிலை நிறைவு பெறாமல் இரண்டாம் நிலை செயல் கூடி வாராது.***

✡ 1950இல் நிறுவிய கிராமப்புற பள்ளிகள் மூடப்பட்டன. பசி முதற்கட்டம். படிப்பு இரண்டாம்கட்டம். மதியஉணவு வந்தபின்னரே பள்ளிகள் நிறைந்தன.

✡ 1965 முதல் பசுமைப்புரட்சி செயல்பட்டு வந்தது. இந்திய சர்க்கார் சிறுதொழில்களை ஊக்குவிக்கச் செய்த 10 அல்லது 20 ஆண்டு முயற்சி வீணாயிற்று. பசுமைப்புரட்சி வெற்றி பெற்ற பின், சிறு தொழில்கள் வெற்றி பெற்றன.

✡ 1950 முதல் 5 ஆண்டு திட்டங்கள் செயல்பட்டன. இரண்டாம் திட்டத்தில் உருக்கு ஆலைகள் ஆரம்பித்தனர். நாட்டின் செல்வ நிலை உயரவில்லை.

❀ விவசாயம் முதலில், தொழில் இரண்டாவதுஎன்பது சட்டம்.

❀ திட்டக் கமிஷன் மீண்டும் அடுத்த திட்டத்தில் விவசாயத்தை ஏற்றுக்கொண்டது.

✡ உடல் நலம், நாட்டின் பொருளாதாரம், வீட்டில் வசதி, நாட்டில் கல்வி பரவுவதுபோன்ற எல்லாச் செயல்களிலும் முன்அமைப்பு வெற்றி பெற்றால், அத்துடன் பெருநிறைவு பெற்றால், அடுத்த கட்டம் தானே எழும். நாமே எழுப்பினாலும் பலிக்கும்.

✡ மனிதனுக்கும், நாட்டிற்கும், குடும்பத்திற்கும், தொழிலுக்கும், செயலுக்கும், எண்ண நிறைவுக்கும், நட்பின் உறவுக்கும், திருமண நிறைவுக்கும் சட்டம் ஒன்றே.

❀ ❀ ❀

*தொடரும்.......*

## ஜீவிய மணி

**நிஷ்டையில் பெறுவது மோட்சம்.**

**நிதர்சனமாகப் பெறுவது சத்தியஜீவியம்.**



# ஆன்மீக மற்றும் மனோதத்துவ உண்மைகள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

என். அசோகன்

421. ஒரு வீட்டைக் கட்டிப் பராமரிப்பதுபோல நாம் ஒரு சூழலை உருவாக்கி, அதையும் பராமரித்துக் கொள்ளலாம். இதை வெற்றிகரமாகச் செய்ய நல்ல சூழலை உருவாக்கிக் கொள்வதற்கான ரகசிய சூட்சும அறிவு அறிந்தால் நமக்கு உதவும்.

422. சுத்தம், தணிவான பேச்சு, சுமுகம், அகப்பரிசுத்தம், ஆகியவை உயரும் அளவிற்கு நம்முடைய ஜீவிய நிலையும் உயரும். மாறாக, அசுத்தம், சத்தமான பேச்சு, சுமுகக் குறைபாடுகள் மற்றும் அகப்பரிசுத்த குறைபாடுகள் அதிகரிக்கும் அளவிற்கு ஜீவிய நிலையும் தாழ்ந்து போகும்.

423. உயர்ந்த ஜீவிய நிலையில் இருப்பவர்கள் அதற்குண்டான பண்புகளை வளர்த்துக் கொண்டு, அதன்படி தம் வாழ்க்கையை நடத்திக் கொள்ள வேண்டும்.

தாழ்ந்த ஜீவிய நிலையில் உள்ள மற்றவர்களைப் போல் இவர்களும் நடந்துகொண்டால் அவர்கள் செய்வது பலிக்கலாம். ஆனால் அவர்களுடைய உயர்ந்த ஜீவியநிலை நீடிக்காமல் மறைந்துவிடும்.

424. உயர்ந்த ஜீவியநிலைஎன்பது புதிதாக முளைக்கின்ற இளஞ்செடி போன்றது. சுற்றி இருக்கின்ற தாழ்ந்த சூழலால் அது மிதிபட்டு நசுங்கிவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

425. நம்முடைய ஆன்மாதான் நம்முடைய personalityயின் மிக உயர்ந்த அம்சமாகும். இருந்தாலும் நம்முடைய personalityயில் அதுதான் மிகவும் சக்தி வாய்ந்த அம்சம்என்று சொல்ல முடியாது. நம்முடைய அறிவு, உணர்வு, உடம்பு ஆகிய இந்த மூன்றுக்கும் ஆன்மா அடங்கி இருக்கிறது. உயர்ந்தஅம்சம் ஏன் தாழ்ந்த அம்சங்களுக்கு அடங்கியிருக்கிறதுஎன்பது புரியாத புதிர்.

426. சமூகத்தின் பல்வேறு நிலைகளில் உள்ளவர்களுடைய பர்சனாலிட்டி அந்தந்த நிலைக்குரிய அம்சங்களுடன் விளங்கும். மேல்வகுப்பைச்

சார்ந்தவர்கள் நாகரீகமானவர்களாக இருப்பார்கள். இடை நிலையில் உள்ளவர்கள் கன்சர்வேட்டிவ் ஆகவும் போட்டி மனப்பான்மை நிறைந்தவர்களாகவும் பணத்தைப் பெரிதும் மதிப்பவர்களாகவும் இருப்பார்கள். உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் physicalஆகவும் தோற்றத்திலும், பேச்சிலும் நாகரீகம் குறைந்தவர்களாகவும் இருப்பார்கள்.

427. உலகம் முழுவதும் புதுப் பணக்காரர்கள் பழைய பணக்காரர்களை விட அதிக ஆடம்பரமாகவே இருப்பார்கள். இந்த ஆடம்பரம் எல்லாம் அகன்று, பழைய பணக்காரர்களுக்கு நிகரான நாகரீகம் வருவதற்கு புதுப் பணக்காரர்களுக்கு இருபது அல்லது முப்பது வருடங்கள் ஆகும்.

428. உழைக்கும் வர்க்கத்திலிருந்து மேல் மட்டத்திற்கு உயர்ந்தவர்கள் பழைய உழைக்கும் வர்க்கத்தை சேர்ந்தவர்களைவிட்டு மிகவும் விலகி நிற்பார்கள். தாம் உழைக்கும் வர்க்கத்திலிருந்து வந்தவர்கள் என்பதைப் பற்றிய தாழ்வுமனப்பான்மை அவர்களுக்கு இருப்பதால் இவ்வாறு அவர்கள் நடந்து கொள்கிறார்கள்.

429. வக்கீல் தொழில், மருத்துவம், மற்றும் ஆசிரியர் தொழில் போன்றவற்றில் ஈடுபட்டுள்ளவர்கள் அதிக அறிவு வளர்ச்சி கொண்டவர்களாக இருப்பார்கள். வியாபாரம் மற்றும் அரசியலில் ஈடுபட்டுள்ளவர்கள் ஊக்கமும் ஆளுந்தன்மையும் அதிகம் கொண்டவர்களாக இருப்பார்கள். தச்சு வேலை மற்றும் தையல் வேலை போன்ற கைவேலைகளில் ஈடுபடுபவர்கள் கைத்திறன் மிகுந்தவர்களாக இருப்பார்கள். விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் எளிமையானவர்களாகவும், physical தன்மை கொண்டவர்-களாகவும் முறையாகச் செயல்படக்கூடியவர்களாகவும் இருப்பார்கள்.

430. பொதுவாக ஒருவர் செய்கின்ற வேலை கைவேலையாக இருந்தால், அவர் பிஸிகலாக இருப்பார். செய்கின்ற வேலையில் பணம் நிறைய சம்பந்தப்பட்டு இருந்தால், நிறைய பேர்களை வேலை வாங்கும்படி இருந்தால், அந்த அளவிற்கு அவர் சக்தி நிறைந்தவராக இருப்பார். செய்கின்ற வேலை அறிவுத்திறன் நிறைந்த வேலையாக இருந்தால், அந்த அளவிற்கு அறிவாளியாக இருப்பார்.

431. கலைஞர்களுடைய உணர்வு மையத்தில் எனர்ஜி நிரம்பியிருப்பதால்



அவர்கள் பொதுவாகவே கட்டுப்பாடுகளை இழந்து, ஒழுக்கம் குறைந்தவர்களாகவே இருப்பார்கள். கலைஞனாய் இருந்து கொண்டு, அதே சமயத்தில் ஒழுக்கம் நிறைந்தவர்களாக இருக்க வேண்டும்என்றால் மனஉறுதி அதிகம் தேவை.

432. ஆன்மீகத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்குத் தீய சக்திகளின் தூண்டுதல்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதே பெரிய சவாலாக அமைகிறது.

433. பணம், காமம், வசதி போன்ற தூண்டுதல்களைவிட அதிகாரம், புகழ், மாந்திரீக சக்திகள் ஆகியவற்றை அடையலாம்என்ற தூண்டுதலிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வது ஆன்மீகத் துறையில் உள்ளவர்களுக்கு மேலும் கடினம்.

434. சாதாரண வாழ்க்கையில் ஏற்றத்தாழ்வுகள் இருப்பதுபோல ஆன்மீகத் துறையிலும் ஏற்றத்தாழ்வுகள் உண்டு. இடைவிடாமல் தொடரும் முன்னேற்றம்என்பது அரிது. நம் நம்பிக்கையை ஆட்டம் காண வைக்கும் சிரமங்களும் உற்சாகத்தைக் குறைக்ககூடிய நேரங்களும் இடைஇடையே வருவதுண்டு.

435. சமூகத்தை ஒட்டிச் செயல்படுபவர்கள் நல்லவர்கள்என்று சொல்ல முடியாது. சமூகத்தை ஒட்டிச் செயல்படுபவர்கள் சமூகத்தின் அதிகாரத்திற்குக் கட்டுப்படுகிறார்கள்என்றுதான் அர்த்தம். ஆடம்பரமான திருமணங்களும், வரதட்சணைகளும் சமூகத்தில் வழக்கமாக இருக்கிறதென்றால் சமூகத்திற்குக் கட்டுப்பட்டவர்கள் தங்கள் வீட்டு திருமணங்களையும் இப்படித்தான் நடத்துவார்கள். இப்படி, சமூகத்திற்குக் கட்டுப்படுவதால் அவர்கள் செய்வதுதான் சரிஎன்று சொல்ல முடியாது. வரதட்சணை கொடுப்பதுஎன்பது சமூகத்தின் வழக்கம். அதைக் கொடுக்க மறுப்பதுதான் முறையான செயல்பாடு.

436. புதுமைக்காக நிகழும் மாற்றங்களில் முன்னேற்றம் இருக்கிறதென்று சொல்ல முடியாது. துணிமணிகளிலும், உணவுப் பழக்க வழக்கங்களிலும், சிகை அலங்காரத்திலும் நிகழ்கின்ற புதுப்புது மாற்றங்கள் மக்களுக்குப் பிடித்திருக்கலாம். ஆனால் இவை முன்னேற்றத்தின் அறிகுறிஎன்று சொல்வதற்கில்லை.

புடவையிலிருந்து சுடிதாருக்கு மாறுவதோ, இட்லி, தோசையிலிருந்து

சப்பாத்தி, பரோட்டாவிற்கு மாறுவதோ ஒரு fashionஏ தவிர, நாகரீக வளர்ச்சிஎன்று ஆகாது.

சர்வாதிகாரநாடு ஜனநாயகநாடாக மாறுவதோ, அல்லது விவசாய நாடு தொழில்மயமாவதோ உண்மையிலேயே நாகரீக வளர்ச்சியைக் குறிக்கின்ற மாற்றங்களாகும்.

437. உழைக்கும் வர்க்கத்தினருக்கும், பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும் இப்போது கிடைத்துள்ள அதிக சுதந்திரம் பழைய கீழ்ப்படிதலுக்கு எதிரானதாகக் கருதப்படுகிறது. ஆனால் பழைய நாட்களில் தொழிலாளிகளும், பெண்களும் பயத்தின் காரணமாகத்தான் அடங்கி இருந்தார்கள். இப்பொழுது பயம் போய்விட்டதால் தைரியமாக எதிர்க்கிறார்கள். கலாச்சாரம் மேலும் முன்னேறும்போது இந்த எதிர்ப்பும் போய் உண்மையான சுமுகம் வரும்.

438. பல இந்தியப் பெற்றோர்கள் வயது வந்த பிள்ளைகளை இன்னமும் கட்டுப்படுத்த முயல்கிறார்கள். ஆனால் சுதந்திரம் அதிகரித்து வரும் இப்பொழுது உள்ள சூழ்நிலையில் இத்தகைய முயற்சிகள் பெரும்பாலும் தோல்வியில் முடிகின்றன. மேலை நாட்டில் பெற்றோர்கள் இதை வெகுநாட்களுக்கு முன்பே உணர்ந்து விட்டார்கள். இந்தியாவில் இன்னமும் உணராமல் உள்ளார்கள்.

439. ஓர் இந்தியக் குடும்பம்என்றால் பொதுவாக அதிகாரம் செய்யும் தகப்பனாரும், அன்பு காட்டும் தாயாரும் உள்ள குடும்பமாகக் கருதப்படும். பெரும்பாலும் பல குடும்பங்களில் இந்த நிலைமை இன்னமும் நிலவுகிறது.

440. பெற்றோர்கள் வயதான காலத்தில் பிள்ளைகளின் ஆதரவை எதிர்பார்ப்பது வழக்கம். அந்த ஆதரவு கிடைக்கிறதா, இல்லையா என்பது பிள்ளைகள் நன்றியறிதலுடன் உள்ளார்களா, இல்லையா என்பதைப் பொருத்தது. பெற்றோர்கள் தம்மை வளர்ப்பதற்கு என்ன தியாகம் செய்துள்ளார்கள்என்பதை அறியாத பிள்ளைகளிடமிருந்து அந்த ஆதரவு கிடைப்பது கடினம்.

*தொடரும்.....*

❀ ❀ ❀





## ஏகன் அநேகனுக்கு முந்தியவனில்லை

முந்தையது, பிந்தையதுஎன்பது காலத்திற்குரிய கணக்கு. காபினட் கூட்டத்திற்கு மந்திரிகள் ஒருவர்பின் ஒருவராக வந்தால், முன்வருபவர்கள் சீனியர்எனவும், பின்வருபவர்கள் ஜூனியர் எனவும் எடுத்துக் கொள்வதில்லை. நமது பாஸ் புக்கில் மேலே 10,000 ரூபாயும், கீழே 50,000 ரூபாயும் வரவு வைத்திருந்தால் முந்தையது பெரியது, பிந்தையது சிறியதுஎன நாம் கொள்வதில்லை. ஏகன் அநேகனாக மாறினான் என்றால், ஏகன் முதலிலும், அநேகன் பிறகும் வந்ததாகத் தோன்றுகிறது. பிரதமரைத் தேர்ந்தெடுக்கும் கூட்டம் டெல்லியில் நடந்தது. சாஸ்திரியை பிரதமராக்க வேண்டும்என்றார் தலைவர். எங்கே சாஸ்திரி? முதல் வரிசையிலில்லை, எங்குமில்லை. வாயிற்படிக்கு வெளியே நாலு பேருடன் உட்கார்ந்திருந்தார். கடைசியில் உட்கார்ந்து இருப்பதால் அவருக்கு முதலிடம் இல்லாமலில்லை.

✡ **புதியனவற்றை நாம் நாமறிந்த கணக்குப்படி ஏற்கிறோம். அது எல்லாச் சமயங்களிலும் சரியாக இருக்காது.**

ஏகனும், அநேகனும் காலம் உற்பத்தியாவதற்குமுன் எழுந்தவர்கள். அவர்களைக் காலத்திற்கு உட்படுத்த முடியாது. பாண்டி மகாராஜா கார் வைத்திருக்கவில்லை, பேப்பரில் பேனாவால் எழுதவில்லை, உலக பூகோளம் அறியாதவர்என நாம் அவரை நினைப்பதில்லை. பேனா, பேப்பர், கார், பூகோளம் ஆகியவை இக்காலத்து விஷயங்கள். இவற்றைக்கொண்டு 10 நூற்றாண்டு முன்னிருந்தவரை நாம் கணிக்க முடியாது.

✡ **பிரம்மத்தை எதைக் கொண்டும் கணிக்க முடியாது.**

✡ **இந்திய ஆன்மீகத்தில் மோட்சம் உயர்ந்த இடம் பெற்றது.**

**மாயாவாதத்தை இந்தியா முழுவதும் ஏற்றது. கர்மத்தை இந்தியர் ஏற்றனர்.**

**ஆன்மாவை மனத்தால் அறிய முயன்றதால் விளைந்த விளைவுகள் இவை.**

**சத்தியஜீவியத்தால் ஆன்மாவைப் புரிந்து கொண்டால்,**

- **மோட்சம் திருவுள்ளமில்லை.**
- **திருவுருமாற்றமே திருவுள்ளம்.**
- **உலகம் அற்புதம்.**
- **சத்தியஜீவன் பிறப்பான்.**
- **வாழ்வில் தீமையோ, தோல்வியோ இல்லை.**
- **மனிதன் பிரம்மம்என்பது விளங்கும்.**

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஏழாம் நிலையிலுள்ள உடல் மனம் (subconscious skill) ஆழ்மனத் திறனை அடைய உதவும். மனத்தில் - 3ஆம் நிலை - உள்ள மனம் திறமையை அறிவதில் முதல் நிலையிலுள்ளது. ஏழாம்நிலைத் திறனை அறிகிறது. ஏழாம் நிலை விரும்பி 3ஆம்நிலை மனத்தை ஏற்பது வளர்ச்சி. விரும்பி ஏற்பது விரும்பிப் பணிவதனால் பலன் அடுத்த நிலைக்குப் போகும் வளர்ச்சியாகும். ஒன்பதாம் நிலைக்குப் பின்னாலுள்ள ஆன்மா கிளம்பி ஜீவனை நடத்துமானால், அது பரிணாம வளர்ச்சியாகும்.

***எழும் மூன்றும் ஏற்பது வளர்ச்சி. விரும்பி ஏற்பது பரிணாமம்.***





# நல்லெண்ணம்

இல. சுந்தரி

*நமக்கு என்ன அதிர்ஷ்டம் வேண்டுமோ, அது நம்மைச் சார்ந்தவர்க்கெல்லாம் வரவேண்டும்என சந்தோஷமாக மனம் கேட்க வேண்டும். நமக்கு அது கடைசியில் வரவேண்டும்எனவும் பிரார்த்திக்க வேண்டும். சச்சிதானந்தத்தில் சக்தி சித்திலிருந்து பிரியுமிடம், நல்லெண்ணம் அந்த இடத்திற்குரியது. அதுவே அன்னையின் பிறப்பிடம். எனவே, அன்னைஎன்பதை நல்லெண்ணம் என்பதன் மூலம் சொல்லும் முறையிது.*

*ஸ்ரீ கர்மயோகி*

வாசு பக்தியும், பணிவுமுள்ள இளைஞன். பி.எஸ்.ஸி. கம்ப்யூட்டர் தேறியவன். பிரச்சினை ஒன்றிற்குத் தீர்வுகாணும் வாயிலாக ஓரன்பர் மூலம் தியான மையம் வந்தான். ஸ்ரீ அன்னை, ஸ்ரீ அரவிந்தரின் கருத்துகளில் நாட்டம் ஏற்பட்டு, அன்னையை ஏற்று, தியான மையத்திற்குச் சேவை செய்யவும் ஆரம்பித்தான். கூடல்களில் பேசப்படும் அன்னையின் கோட்பாடுகளைச் செயல்படுத்தும் நாட்டமும் கொண்டான். அன்றைய கூடலில் நல்லெண்ணம் பற்றிய கருத்துகள் பேசப்பட்டன.

நம்முடன் உள்ளவர் மீது நல்லெண்ணம் வேண்டும். சிறிது, சிறிதாக அதை விரிவு செய்து, பிறகு எட்ட இருப்பவர், வேண்டாதவர், அவர்கட்கும் அதிர்ஷ்டம் வரவேண்டும்என்று நினைக்க வேண்டும். அந்த நினைப்பு சந்தோஷம் கொடுப்பது நல்லெண்ணம் என்றெல்லாம் கூறப்பட்டது.

மனப்பூர்வமாக நாம் ஒன்றிற்கு ஆர்வப்பட்டால் அன்னை அதற்கு உதவுவார்என்பதைப் பல முறை கண்டிருக்கிறான். இந்த நல்லெண்ணத்தை மேற்கொண்டு, அதன் மூலம் அன்னையை மேலும் நெருங்கவேண்டும்என்று எண்ணினான். உடனே அன்னை அதற்கு

ஒரு வாய்ப்பும் தந்தார். இவனும், எதிர்வீட்டுப் பாலுவும் ஒன்றாகப் படித்துத் தேர்ச்சி பெற்றவர்கள். வகுப்பில் எப்போதும் இவர்களுக்கு முதல் மதிப்பெண் வாங்குவதில் போட்டி. வென்றவர் மற்றவரைப் போலியாகப் பாராட்டுவது வழக்கம். அது கடந்த காலம். வாசு அன்னையை ஏற்றபிறகு அன்னைக்குப் போட்டி பிடிக்காதுஎன்று அறிந்தவுடன் யாருடனும் போட்டியிடுவதில்லை. தன் பங்கை இயன்றவரை சிறப்பாகச் செய்துவிட்டு அமைதியாகிவிடுவான்.

இப்போது 'நல்லெண்ணம்' பற்றிய சொற்பொழிவு, அவன் தன் கடந்த காலத்தில் எதற்கெடுத்தாலும் பாலுவுடன் போட்டியிட்டு, அவர்களுக்கிடையே அடிக்கடி சுமுகமின்மையை ஏற்படுத்திய தன் செயல்களை எண்ணி வெட்கப்படச் செய்தது.

அன்றைய செய்தித்தாளில் வந்த விளம்பரம் இவன் படிப்பிற்கும், திறமைக்கும் ஏற்ற வேலைவாய்ப்பை அறிவித்தது. இந்த வேலை வாய்ப்பை பாலுவிடமும் கூறி, இருவரும் வேலைக்கு விண்ணப்பிக்க வேண்டும். அதில் பாலுவுக்கு முதலில் வேலை கிடைக்க தன் மனம் விரும்பி பிரார்த்திக்க வேண்டும்என்று முடிவு செய்தான். சிறிது, சிறிதாகத் தன் மனத்துடன் பேசி இந்த முடிவை அது (மனம்) ஏற்கச் செய்தான். அதன்பிறகு பாலுவைத் தேடி எதிர்வீட்டிற்குச் சென்றான்.

"பாலூ, பாலூ" என்ற ஓரிரு முறை அழைத்தும் நண்பனின் பதில் குரல் வாராததால் முன் பக்கத்திலிருந்து ஓரடி உள்புறம் நகர்ந்து, சற்று குரலை உயர்த்தி "பாலூ" என்றான் மீண்டும்.

"டேய், உனக்குக் கண்ணா தெரியவில்லை? இங்கேதானே உட்கார்ந்திருக்கிறேன்" என்றான் பாலு.

"சாரிடா, எனக்கிருந்த பரபரப்பில் ஒன்றும் புரியவில்லை" என்றான் வாசு.

"சாரி எனக்கு வேண்டாம். அதை என் அக்காவிடம் கொடு. பரபரப்பு எதற்கு?" என்றான் கேலியாக.

"எப்போதும் உனக்குக் கிண்டல்தான். இன்று செய்தித்தாள் பார்த்தாயா?" என்றான் வாசு.

"ஆமாம், இந்தத் தண்டச்சோற்றுக்கு அது ஒன்றுதான் பாக்கி"



என்றான் அலுப்பாக.

வீட்டில் யாரோ அவனை ஏதோ சொல்லியிருக்கிறார்கள்என்று புரிந்து கொண்ட வாசு, "தண்டச்சோறில்லாமல், எல்லோரும் மதிக்கும் மனிதனாக ஆவதற்கு ஒரு வழி வந்திருக்கிறது அதில்" என்றான்.

"ஏன், மன்மோகன் சிங்கிற்குப் பிரதமர் பதவி பிடிக்கவில்லை- யாமா? அதை நானே ஏற்க வேண்டும்என்று கெஞ்சுகிறாரா?" என்றான் கேலியாக.

"ஆமாம், இந்தக் கேலிக்கொன்றும் குறைச்சலில்லை. இறையருள் இருந்தால் அதுவும் நடக்கும்" என்றான் வாசு.

"ஆமாம், இப்போதுள்ள தகுதிக்கு ஒன்றையும் காணோம்" என்று அலுத்துக் கொண்டான் பாலு.

"அதைத்தானே சொல்ல வந்தேன். இதோ பார், நம் படிப்புத் தகுதிக்கு ஏற்ப வேலையொன்று உள்ளது" என்று விளம்பரத்தைக் காட்டினான் வாசு.

"ஆர்வமாக வாங்கிப் பார்த்தான். ஆனால் ஏனோ உடனே விரக்தியானான். போடா, இது பெரிய செய்தியா?" என்றான்.

"ஏன், இது நமக்குப் பெரிய செய்தியில்லையா? நாம் படித்து முடித்து மூன்றாண்டுகளாக வேலை தேடிக் கொண்டிருக்கிறோம். நல்ல வாய்ப்புஒன்று வரும்போது முயற்சி செய்வது நம் கடமையல்லவா?" என்றான் வாசு.

"ஏன், இத்தனை நாட்கள் நாம் முயற்சி செய்யாமலா இருந்தோம்? விண்ணப்பத்திற்கும், போய்வரும் செலவிற்கும் கொடுத்தே என் வீட்டில் அலுத்துப்போய்விட்டார்கள். இதற்கு 50 ரூபாய் கொடுத்து விண்ணப்பம் வாங்க வேண்டும். பிறகு இண்டர்வியூவிற்குச் சென்னை செல்ல வேண்டும். 2 பேர் எடுக்க இரண்டாயிரம் பேருக்கு அழைப்பு அனுப்புவார்கள். இத்தனையும் போக, தகுதியிருந்தாலும் 50 ஆயிரம் டெப்பாசிட் கேட்பார்கள். இதெல்லாம் என் வீட்டில் நடக்குமா?" என்று அவநம்பிக்கையுடன் பேசினான் பாலு.

"அதுசரி, ஒன்றுமேயில்லாமல் 'மாதம் பத்தாயிரம் சம்பளம். அதையும் உங்கள் வீட்டு வாசலுக்கே வந்து தந்துவிடுவோம். நீங்கள்

பெரியமனசு பண்ணி முடிந்தபோது வந்தால் போதும்' என்று அழைப்பார்கள்என்று எதிர்பார்க்கிறாயா?'' என்றான் வாசு.

''அப்படியில்லைடா, இவ்வளவு செலவுக்கு எங்கே போவது?'' என்று நொந்து பேசினான் பாலு. அவன் வீட்டு நிலவரம் அப்படி. வாசுவுக்குத் தன்னைப் பரிசோதிக்க இதுவே சிறந்த வாய்ப்பாக இருந்தது. அன்னை வந்தால் முதற்கட்டமாக வறுமை போவதைக் கண்டிருக்கிறான். இங்கும் அதற்குத் தேவையுள்ளது. பாலுவின் சீக்கிரம் சோர்ந்துபோகும் குணமே அவனை முன்னேறவிடாமல் தடுக்கிறதுஎன்பதையும் வாசு அறிந்திருந்தான். இருப்பினும் வலியப் போய் அவனைத் திருத்த முடியாதிருந்தான்.

எனவே, சிறிது சிறிதாகத் தன் முயற்சியைத் தொடங்கினான். ''உனக்கும் சேர்த்து நானே விண்ணப்பப் படிவம் வாங்கிவிடுகிறேன். வா, பூர்த்தி செய்து அனுப்புவோம். இம்முறை எனக்காக இதை ஏற்றுக் கொள்'' என்று நயமாகப் பேசி, அழைத்துப்போய் விண்ணப்பப் படிவமும் வாங்கி, நிறைவு செய்து, தன் செலவிலேயே அனுப்பிவிட்டான்.

''அன்னையே, என்னுள் இருந்து நீரே செயல்படப் பிரார்த்திக்கிறேன். என் விருப்பு, வெறுப்பு இதில் குறுக்கிடக்கூடாது. இதன்மூலம் நல்லெண்ணத்தை வளர்த்து, மேலும் உம்மை நெருங்க வேண்டும்'' என்று அடிக்கடி பிரார்த்தித்தான்.

சிறிது நாட்களில் இண்டர்வியூவிற்கு அழைப்பு வந்துவிட்டது.

வாசுவிற்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. அதை நிதானமாக ஏற்றான். அன்னை விஷயத்தில் எந்த வடிவிலும் 'நான்' வருவது சரியில்லை என்பதை அடிக்கடி கேட்டும், அனுபவித்தும் உணர்ந்திருக்கிறான். ''அன்னையே, இது உம் கருணை'' என்று நன்றியுடன் ஏற்றுக் கொண்டான். சற்று நேரத்தில் பாலு இவனைத் தேடி வந்தான். இவன் (பாலு) திடீர் திடீரென சோர்ந்து போவான். எனவே, கவனமாக அவனை அன்னைக்குச் சமர்ப்பித்தான்.

''வாசு, உனக்கும் இன்டர்வியூ கார்டு வந்திருக்கிறதா?'' என்று கேட்டான்.

''ஆமாம், பாலு. வந்துவிட்டது. இந்த வாரக் கடைசியில்தான் இன்டர்வியூ. அதற்குள் நாம் தயாராகிவிடலாம்'' என்றான் வாசு.



''சென்னை சென்று வர, அங்கு சாப்பாட்டுச் செலவிற்கு, ஒரு நல்ல டிரஸ் எடுக்க, இதற்கெல்லாம் பணம் வேண்டாமா?'' என்றான் பாலு.

''வேலை வேண்டுமென்றால் முறையாக நாம் செய்ய வேண்டியதைச் செய்ய வேண்டாமா?'' என்றான் வாசு.

''அதெல்லாம் சரிதான். நிச்சயமில்லாத வேலைக்கெல்லாம் என் வீட்டில் செலவு செய்யமாட்டார்கள். செலவில்லாமல், உள்ளூரிலேயே கிடைக்கும் போது நான் பார்த்துக் கொள்கிறேன். நீ மட்டும் போய் வா. அதைச் சொல்லத்தான் வந்தேன்'' என்றான் பாலு.

''செலவெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். இதை ஒரு காரணமாய்ச் சொல்லி நல்ல வாய்ப்பை இழக்க வேண்டாம்'' என்றான் வாசு.

''அப்படி உன் செலவில் எல்லாம் நடந்தால் என் மனத்தில் அடிமையுணர்வுதான் எழும். சுதந்திரமாக அதை என்னால் அனுபவிக்க முடியாது. நான் வரவில்லை. நீயே போய் வா'' என்றான் பாலு.

''வேலை கிடைத்தவுடன் என் பணத்தைத் திருப்பிக் கொடு, வாங்கிக் கொள்கிறேன். இதற்காக ஒரு நல்ல வாய்ப்பை விட வேண்டாம்'' என்றான் வாசு.

''வேலை கிடைத்தால், சரி. ஒருவேளை கிடைக்காமற் போனால் என்ன செய்வது?''

''இப்படி அவநம்பிக்கை படுவதை முதலில் விட்டுவிடு. உனக்கு நிறைய தகுதியிருக்கிறது. முயற்சிக்கும் திறமைக்கும் என்றும் பலனுண்டு''.

''உனக்கும்தான் தகுதியிருக்கிறது, திறமையிருக்கிறது. எனக்குத் துணிவில்லை, என்னை விட்டுவிடு'' என்றான்.

''எப்பொழுதும் அளவை நிர்ணயிப்பது நம் குறுகிய கண்ணோட்டம்தான். எனக்குக் கிடைத்தால் உனக்குக் கிடைக்காது என்றோ, உனக்குக் கிடைத்தால் எனக்குக் கிடைக்காதென்றோ ஏன் நாமே வரையறை செய்ய வேண்டும்'' என்றான் வாசு.

ஆனால் பாலுவுக்கு உள்ளூர ஓர் எண்ணம், ஒருவேளை இவ்வளவு நம்பிக்கையுள்ள அவனுக்கு வேலை கிடைத்துத் தனக்கு இல்லையென்றால் எத்தகைய ஏமாற்றம் ஏற்படும் என்று.

வாசுவின் நினைவோ வேறு மாதிரியிருந்தது. பாலுவுக்கு முதலில் வேலை கிடைத்துவிட வேண்டும். தனக்கு இல்லையென்றாலும் பரவாயில்லைஎன்று நினைத்தான். அப்பொழுது உடன் வேறொரு நினைவும் வந்தது. அன்னைஎன்பது அனந்தம். அதற்கு அளவில்லை. அவன் அன்னைக்கு நாள்தோறும் பூ வாங்கிச் சமர்ப்பிப்பான். ஒரு நாள், ஊர்த்திருவிழா மற்றும் முகூர்த்தநாள். பெரும்பான்மை பூக்களும் திருவிழாவிற்கே போய்விடும். முகூர்த்த நாளுக்கு எஞ்சிய பூக்களும் போய்விடும். அன்று பூ வாங்கப் போன வாசு எல்லாக் கடைகளும் பூக்கள் விற்கப்பட்டு, வெறிச்சோடி இருப்பதைப் பார்த்தான். அப்போது மனம் தளராமல், 'அன்னை அனந்தம். விழாவிற்குப் போனாலும், முகூர்த்தத்திற்குப் போனாலும் அன்னைக்கு, பூ இல்லாமல் போகாது. அன்னை அனந்தம்' என்று நினைவுபடுத்திக் கொண்டான். என்ன விந்தை, ஒரு பையன் அவனைப் பின் தொடர்ந்து ஓடி வந்தான். ''உங்களை அந்தப் பூக்கடைக்காரர் கூப்பிடுகிறார்'' என்றான்.

திரும்பி பூக்கடைக்கு வந்தான். ''சார், முன்னெல்லாம் நீங்கள் நான் வேலை பார்த்த கடையில் மதருக்குப் பூ வாங்குவீங்களே, நினைவிருக்கா? ஒரு தோட்டத்து பெரிய மல்லிகைப் பூவை மதருக்கென்று எடுத்து வைத்துக் கொடுப்பேன். முதலாளிகூட என்னைக் கேலி செய்வார். இப்போது நானே சொந்தமாய்க் கடை வைத்துவிட்டேன். நீங்கள் மதருக்கு நம் கடையிலே வாங்கிக் கொள்ளலாம். இன்று, முதல் நாளே உங்களைப் பார்த்தது என் அதிர்ஷ்டம். இன்று மதருக்கு நானே பூ தந்துவிடுகிறேன்'' என்று சொல்லி ஒரு பை நிறைய விதவிதமான பூக்கள் தந்தான். வாசுவுக்கு அன்னை தரிசனம் அது. 'அன்னை அனந்தம்என்பது சத்திய வாக்கு. நம் பங்கு தூய நல்லெண்ணம். தகுதியுள்ள அனைவர்க்கும் அன்னை அளிப்பார். அவர் அனந்தமல்லரோ!' என்று உள்ளே நெகிழ்ந்தான்.

*தொடரும்.....*

❀ ❀ ❀





## Mother has a sensation of being in the presence of the Absolute
## பிரம்மத்தின் முன்னிலையில் நிற்கும் உணர்வு பெற்றார் அன்னை

✡ இடையறாது பிரம்மத்தின் முன்னிலையில் தெய்வீக ஆன்மா உள்ளது என்பது **Life Divine**இல் உள்ள ஒரு வாக்கியம்.

✡ அந்த நிலையையெய்த தெய்வீக ஆன்மாவின் தகுதிகள்:

1. **அது சச்சிதானந்தத்துள் உறைகிறது.**
2. **ஏகனிலும் அநேகனிலும் ஒரே சமயத்தில் உறைகிறது.**
3. **அதன் ஞானத்திற்கும் உறுதிக்கும் பிணக்கில்லை.**
4. **அஞ்ஞானத்தினின்று முழுவதும் வெளிவந்துவிட்டது.**
5. **பரிணாமத்தால் சத்தியஜீவியம் பெற்ற நிலையை தெய்வீகஆன்மா சிருஷ்டியிலேயே பெற்றுள்ளது.**
6. **அதன் பார்வைக்கு சிருஷ்டி அற்புதம், பிரம்மஜனனம், ஆனந்த மயம்.**
7. **தெய்வீகஆன்மாவிற்கு ஜடமான உடலில்லை, சூட்சுமமான ஜீவியமுண்டு.**

❀ அன்னை பகவானை 1914இல் சந்திக்கும் பொழுது கீதையின் யோகத்தை முடித்துவிட்டார்.

❀ கீதையின் யோகம், ராஜ யோகத்தைக் கடந்தது.
பகவான் ராஜ யோகத்தை மூன்று நாளில் முடித்தவர்.
பகவான் முதலில் அன்னையை சந்தித்த பொழுது அகண்ட மௌனத்தை அன்னைக்கு ஆன்மீகப் பரிசாகக் கொடுத்தார்.
அம்மௌனம் அன்னையுடன் கடைசிவரைக்குமிருந்தது.
பகவான் அன்னையின் கணவருடன் பேசிக் கொண்டிருக்கும் பொழுது அதைச் செய்தார்.

❀ பிரம்மத்தின் முன்னிலையிலிருப்பது பெரியது.

அதை உணர்வது அதனினும் பெரியது.

பணத்தைப் பெட்டியில் வைத்திருப்பவன் பணத்தின் பெருமையை உணர முடியாது.

அதை எடுத்து செலவு செய்யும்பொழுது பணம் ‘‘நான் இருக்கிறேன்’’ என்று உணர்வாகக் கூறும்.

மேடையில் அற்புதமாகப் பேசுவது வேறு. பேசி முடித்தவுடன் நீண்ட கை தட்டல் பேச்சின் முக்கியத்துவத்தை ஒலியாக எடுத்துக் கூறுகிறது.

பெரும்பணக்காரருக்குச் செல்வாக்குண்டு.

அவரே முதன் மந்திரியானால் அந்தச் செல்வாக்குச் செல்வதை உணர்வாக அறிவார்.

மாநிலத்தில் முதல்வனாக பாஸ் செய்து வீட்டிற்கு வந்தபின் அக்கம் பக்கத்திலுள்ளவர் பொறாமையால், அல்லது அறிவீனத்தால் அதைக் கண்டு கொள்ளாவிட்டால், ‘சப்’ என இருக்கும்.

இரயில்வே ஸ்டேஷனில் வரவேற்பு கொடுத்து, பார்ப்பவர் எல்லாம் பாராட்டி, பாராட்டுவிழா நடத்தினால், அறிவின் சாதனை உணர்வாக வெளிப்படும்.

- பெறுவது வேறு.
- உணர்வது வேறு.
- பாசம் வெளிப்படும் பொழுதுதான் உணர்ச்சியைத் தொடும்.
- உணர்ச்சியைத் தொட்டால்தான் அது உயிர் பெறும்.
- மோட்சம் பெறும் ஆத்மா கரைந்து மறைவதால் அது எதையும் உணர முடியாது.
- தெய்வீகஆன்மா மேலுலகிலும், பூவுலகிலும் நின்று நிலைபெற்று பிரம்மத்தின் சந்நிதானத்திலிருப்பது உடலில் உள்ள எந்த ஜீவனும் இதுவரைப் பெறாத ஆன்மீகப் பேறு.

❀ ❀ ❀

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.

Editor: N. Asokan

# சம்பந்தம்

சிறு விவசாயக் குடும்பம். அண்ணன், தம்பி இருவர். உடன் பிறந்த பெண்கள் மூவர். இவர்களுடைய பெண்கள் மூவர். ஐந்து பெண் பிறந்தால் அரசனும் ஆண்டியாவான்என்பது பழமொழி. ஜில்லாவின் அடுத்த பகுதியில் 6 பேர் சகோதரர்கள். அவர்கள் பெற்றது 1000 ஏக்கர். அவர்களில் மூத்தவர் இக்குடும்பத்தில் பெண் எடுத்தார். இப்பெரிய குடும்பச் சம்பந்திகள் அடுத்த இரு பெண்களை மணந்தார்கள். முதல் பெரிய குடும்பம் மற்றொரு பெண்ணையும் 3ஆம் பிள்ளைக்குத் திருமணம் செய்தனர். அதே குடும்பத்தில் அச்சிறு குடும்பத்து அடுத்த தலைமுறை 3 பெண்களையும் மணந்தனர்.

✡ பெரிய குடும்பம் பெரிய குடும்பத்தில்தான் சம்பந்தம் செய்யும்.

✡ சிறுகுடும்பத்தைப் பெரிய குடும்பம் நாடாது.

✡ அப்படி ஒரு சம்பந்தம் செய்தபின் அடுத்த பெண்ணை எடுக்க முதலில் வந்தவள் மகாலட்சுமியாக இருக்க வேண்டும்.

✡ பணமுள்ளவர் பணத்தை நாடாமல் எதை நாடி வருகின்றனர்?

பண்பை நாடிவர பணமுடையவன் சம்மதிக்கமாட்டான்.

பண்பை நாடி 6 முறை வர அது பவித்திரமான பண்பாக இருக்க வேண்டும்.

பண்பும் பவித்திரமும், பக்குவத்திற்குடையவை.

✡ இந்தியப் பரம்பரை, தமிழ்ப் பண்பு பணத்தை நாடாமல் பண்பைப் பல முறை நாடும் அளவிலிருக்கும்படி அமைவது பல தலைமுறை வரை

*"பெரிய வீடு"* என அழைக்கப்படுகிறது.

பணம் அழிந்த பின்னும் அழியாத பண்பு பெரிய வீட்டிற்குரியது.

அவர் அன்பரானால் அதே பணம் ஆயிரம் மடங்காகத் திரும்ப வரும்.

❀ ❀ ❀

# மாஜிக்

மாஜிக் இல்லாததை ஏற்படுத்துவதைப் போல் அற்புதமான பெரியவற்றை உண்மையிலேயே உற்பத்தி செய்ய வல்லது என்று பகவான் கூறுகிறார்.

சர்க்கார்என்ற மந்திரவாதி நீர் மீது சைக்கிள் விட்டதை பத்திரிகைகள் போட்டோ எடுத்துப் போட்டிருந்தனர்.

மாஜிக்என்பது தோற்றம், உண்மையில்லை.

இதற்குரிய மந்திரங்கள் வேதத்தின் பகுதி.

பொதுவாக எதிரிகளை அழிக்க இது பயன்படுவதால் இதற்கு Black magic சூன்ய சாஸ்த்திரம்எனப் பெயர்.

மந்திரம் சக்தி வாய்ந்தது. நல்ல பயன், கெட்ட பயன் என்பது பயன்படுத்துபவரைப் பொருத்தது. இந்தியா வருமுன் லேடி மவுண்ட்பாட்டன் பாரிசில் மை போடுபவரைப் பார்த்தார். "உங்கள் கணவர் சிங்காதனத்தில் வீற்றிருக்கிறார்" என்றார்.

மவுண்ட்பாட்டன் வைஸ்ராயானார்.

1956க்குப்பின் உலகில் எல்லா நடவடிக்கைகளும் உயர்ந்து விட்டன. நீர் மேல் சைக்கிள் விடுவதாக மாஜிக் இதற்குமுன் கேள்விப்படவில்லை. சத்தியஜீவிய சக்தி அதன் பலனை மாஜிக்குக்கும் தருகிறதாஎனத் தெரியவில்லை.

❀ ❀ ❀

April 2009 Jiviyam 14 Malar 12
Regd. with the Registrar of Newspaper for India under No.32/01/95/TC (PON TAM 00184)
Malarndha Jiviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/09-11
Price: Rs.5/- WPP No.45/09-11


புதிய வெளியீடுகள்

கர்மயோகியின்

**பரம்பொருள் III** ரூ.200/-

**எங்கள் குடும்பம்** (பாகம் 2) ரூ.250/-

**உலகம் - மோட்சம் - ஸ்ரீ அரவிந்தம்** ரூ.100/-

**யோக வாழ்க்கை விளக்கம் IV** ரூ.150/-

சொசைட்டியின் பிற வெளியீடுகள்

**லைப் டிவைன் விரிவுரைகள்** ரூ.100/-
*தமிழாக்கம்:* என். அசோகன்

**SATYA JYOTHI** ரூ.200/-
(CONCISE TRUISMS)
N.Asokan

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்

கிடைக்குமிடம்

பாண்டியில்
மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்ட நகர் விரிவு,
புதுச்சேரி - 605 011.
✆: (0413) 2212443, 2214231

சென்னையில்
மாம்பலம் தியான மையம்,
"சுந்தரம்",
24, 1வது குறுக்குத் தெரு,
மேற்கு C.I.T. நகர், சென்னை - 600 035.
✆: (044)-24347191